பந்து 02 பக்கங்கள் 28 நவம்பர் 2012

# வெற்றிக் கேடயம்

KEDAYAM

ஜெயிக்கும் வரை விளையாடு

மாத இதழ்

ரூ.60




உலகத்தரத்தில் நம்மவர்




## அடித்தாடத் தெரியாதவருக்கு அணித்தலைவர் பதவி



## ஹம்பாந்தோட்டையில் தங்கவேட்டை நடத்திய அளவெட்டி அருணோதயா




"கேடயம்" விளையாட்டுச் சஞ்சிகையில் உங்கள் வணிக நிறுவனங்களை விளம்பரப்படுத்தலாம்.







| பெயர் | விளையாட்டு | பதக்கம் | பாடசாலை |
|---|---|---|---|
| ஆர்.நிமலேந்திரா | குண்டுபோடுதல் | தங்கம் | யா.உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் |
| பி.நிதர்சன் | கோலூன்றிப்பாய்தல் | தங்கம் | யா.அளவெட்டி அருணோதயா |
| ஏ.பவித்ரா | கோலூன்றிப்பாய்தல் | தங்கம் | யா.அளவெட்டி அருணோதயா |
| எஸ்.தனுஜா | கோலூன்றிப்பாய்தல் | தங்கம் | யா.அளவெட்டி அருணோதயா |
| எஸ்.தனுஜா | உயரம் பாய்தல் | தங்கம் | யா.அளவெட்டி அருணோதயா |
| ஜ.மேரி பௌஸ்ரினா | கோலூன்றிப்பாய்தல் | வெள்ளி | யா.அளவெட்டி அருணோதயா |
| எம்.ஜென்சிகா | கோலூன்றிப்பாய்தல் | வெள்ளி | யா.அளவெட்டி அருணோதயா |
| ஜே.ஜஸ்மினன் | நீளம்பாய்தல் | வெள்ளி | யாழ் இந்துக்கல்லூரி |
| ஏ.ஹொஹாய்ரொஷான் | கோலூன்றிப்பாய்தல் | வெள்ளி | யா.அளவெட்டி அருணோதயா |
| ஆர்.ஜகசனா | கோலூன்றிப்பாய்தல் | வெண்கலம் | யா.அளவெட்டி அருணோதயா |
| கே.டிலுக்சனா | கோலூன்றிப்பாய்தல் | வெண்கலம் | யா.அளவெட்டி அருணோதயா |
| ஆர்.ஜெனனி | கோலூன்றிப்பாய்தல் | வெண்கலம் | யா.அளவெட்டி அருணோதயா |
| எம்.கிருஷணா | உயரம் பாய்தல் | வெண்கலம் | தெல்லிப்பழை மகாஜனா |
| கே.லேகாஜினி | தடைதாண்டல் | வெண்கலம் | வவு.சிவப்பிரகாச மகளிர் வித். |
| ஆர்.துசிகா | தட்டெறிதல் | வெண்கலம் | வவு.தமிழ் ம.மகா.வித். |
| பி.லவணன் | கோலூன்றிப்பாய்தல் | வெண்கலம் | யா.அளவெட்டி அருணோதயா |
| சி.மோடேன் அல்விஸ் | தடைதாண்டல் | வெண்கலம் | யா.சென்.பற்றிக்ஸ் கல்லூரி |
| ஆர்.செந்தூரன் | உயரம் பாய்தல் | வெண்கலம் | யாழ்.இந்துக்கல்லூரி |




# 2012 - பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மெய்வல்லுனர் போட்டி சில பதிவுகள்




மடோன் அல்விஸ்


எல்.லிவிஸ்டன்


வ.ஜஸ்மினன்


ஆர்.நிமலேந்திரா


இ.செந்தூரன்


வட மாகாண ஆளுனர் மற்றும் அதிகாரிகளுடன் பதக்கம் பெற்ற வீரர்கள்

கேடயம் - 01

இலங்கை கல்வி அமைச்சினால் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகளின் நான்காவது கட்டப்போட்டிகளில் வடமாகாண அணி ஐந்து தங்கப்பதக்கங்களை சுவீகரித்துக் கொண்டது. இவற்றில் நான்கு தங்கப்பதக்கங்களை யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயா கல்லூரி வீரர்கள் பெற்றுக் கொண்டனர். மற்றைய தங்கத்தினை உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பாடசாலை மாணவன் பெற்றுக் கொண்டான்.

இந்தப் போட்டிகள் கடந்த ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய அணியில் 400 வீர, வீராங்கனைகள் இடம் பெற்றிருந்தனர். இவர்களில் 250 பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

வட மாகாணத்துக்கு கிடைத்த 18 பதக்கங்களில் 13 பதக்கங்களையும், இரண்டு வர்ண விருதையும் அருணோதயா மாணவர்கள் பெற்றுக் கொண்டனர். இவர்களில் 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப்பாய்தல் நிகழ்வில் அருந்தவன் பவித்ரா 3.01 மீற்றர் உயரத்தினைக் கடந்து தங்கப்பதக்கத்தினை தனதாக்கினார். கடந்த வருடம் இவர் 3.00 மீற்றர் தூரத்தை கடந்து படைத்திருந்த சாதனையை தானே முறியடித்து புதிய சாதனையை தேசிய ரீதியில் படைத்துள்ளார். இந்த விளையாட்டு நிகழ்வில் இதே பாடசாலையைச் சேர்ந்த மேரி பௌஸ்தினா வெள்ளிப்பதக்கத்தினையும், டிலக்சனா வெண்கலப்பதக்கத்தினையும் வெற்றி கொண்டமை சிறப்பம்சமாகும்.

இதேவேளை 21 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் நிகழ்வில் சண்முகராஜா தனுஷா 3.11 மீற்றர் உயரத்தைக் கடந்து தங்கம் வென்றார். இவரும் கடந்த வருடம் தான் நிலைநாட்டிய 3.10 மீற்றர் என்ற சாதனையைத் தகர்த்தே தேசிய மட்டத்திலான புதிய சாதனையை பதிவு செய்தார். அத்துடன், 21 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல் நிகழ்ச்சியிலும் 1.55 மீற்றர் உயரத்தினைக் கடந்து தனுஜா தங்கப்பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டார்.

வட மாகாணத்தைச் சேர்ந்த முன்னணி பாடசாலைகள் பல ஒரு தங்கப்பதக்கத்தையேனும் பெறாத நிலையில் கிராமப்பகுதியைச் சார்ந்த இப்பாடசாலைக்கு நான்கு தங்கப்பதக்கங்கள் கிடைத்ததை இட்டு பலரும் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர். கேடயமும் அவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகிறது. தொடர்ந்தும் இப்பாடசாலை தேசிய மட்டத்தில் அதிகளவான திறமைகளை வெளிப்படுத்துவதற்குரிய வசதிகளை கல்வித்திணைக்களமும், விளையாட்டுத்துறை அமைச்சும் மேற்கொள்ள வேண்டும்.

## ஹம்பாந்தோட்டையில்
# தங்கவேட்டை நடத்திய
## அளவெட்டி அருணோதயா

- க. வரோதயன்





கடந்த செப்டெம்பர் மாதம் ஹம்பாந்தோட்டையில் இடம் பெற்ற 'சேர்.ஜோன் ராபேட் சீனியர் சம்பியன்ஷிப்' போட்டிகளில் கலந்து கொண்ட பா.லவணன் 18 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப்பாய்தல் நிகழ்வில் 3.77 மீற்றர் உயரத்தினைக்கடந்து தங்கப்பதக்கத்தினை சுவீகரித்ததுடன் புதிய சாதனையையும் நிலை நாட்டினார். இதற்கு முன்னர் கடந்த 2008ஆம் ஆண்டு கொழும்பு ஆனந்தா கல்லூரி மாணவன் 3.71 மீற்றர் உயரம் பாய்ந்தமையே சாதனையாக பதியப்பட்டிருந்தது. இந்தப் போட்டிகளில் கலந்து கொண்ட இன்னொரு அருணோதயா வீரரான எஸ்.நந்தலாளன் 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் நிகழ்வில் வெள்ளிப்பதக்கத்தினை பெற்றுக்கொண்டார். இவர் கடந்த ஜுன் மாதம் கொழும்பில் இடம்பெற்ற 15ஆவது ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளிலும் கலந்து கொண்டவராவார்.



தேசிய மட்ட தடகளப் போட்டியொன்றில் முதன்முதலாக இம்முறை தமிழில் சத்தியப்பிரமாணம் எடுக்கப்பட்டது. இவ்வருடம் ஆசிய மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து கொண்ட அ.பவித்ரா சத்தியப் பிரமாணத்தினை அதிதிகள் முன்னிலையில் எடுத்துக்கொண்டார். கொழும்பு சுகதாச விளையாட்டரங்கில் இடம்பெற்ற 15ஆவது ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளில் கலந்து கொண்ட இவர் கோலூன்றிப்பாய்தல் நிகழ்ச்சியில் 3.00 மீற்றர் உயரத்தினைக் கடந்து 4ஆவது இடத்தினைப் பெற்றுக் கொண்டார்.

## பாடசாலைக்கு கிடைத்த வெற்றி தொடர்பாக தங்க வீர, வீராங்கனைகளை உருவாக்கிய பயிற்றுவிப்பாளர்களில் ஒருவரான ரி.வாகீஸ்வரன்



## அவர்கள் 'கேடயம்' இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டி..

கே: இந்த அசாதாரண வெற்றி எப்படிச் சாத்தியமாயிற்று?

ப: பாடசாலைக் கற்றல் செயற்பாட்டின் ஒரு அங்கமாக விளையாட்டையும் நினைத்து அத்துறையில் பிரகாசிக்க வேண்டும் என்ற ஆர்வம் மாணவர்களுக்கு நிறையவே இருக்கின்றது. அதற்கு ஏற்றால் போல் பாடசாலை சமூகமும், புலம்பெயர்ந்து வாழும் எமது கல்லூரியின் பழைய மாணவர்களும் ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள். மாணவர்களின் அதீத ஈடுபாடே அவர்களை மேலும் முன்னோக்கி நகர்த்திவிட எங்களுக்கும் தூண்டுகோலாக அமைகின்றது.

கே: மெய்வல்லுநர் விளையாட்டுக்களில் கோலூன்றிப்பாய்தல், உயரம் பாய்தல் ஆகிய நிகழ்ச்சிகளில் மட்டுமே அதிகளவில் பதக்கங்களை பெறக் கூடியதாக இருக்கின்றதே.. ஏன்?

ப: அனைத்து மெய்வல்லுனர் விளையாட்டுக்களிலும் பிரகாசிக்க கூடிய வீரர்களாக எம் மாணவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் அதற்கான பயிற்றுவிப்பு வசதிகள் போதுமானதாக இல்லை. நாங்களே எல்லாத்துறையிலும் கவனம் செலுத்தினால் ஒரு விளையாட்டில் கூட பிரகாசிக்க முடியாது போய்விடும். அதனால் குறித்த சில மெய்வல்லுனர் விளையாட்டுக்களிலேயே அதிகளவிலான கவனத்தினைச் செலுத்தி மாணவர்களை தயார்ப்படுத்துகின்றோம்.

கே: இதற்கான பயிற்றுவிப்பு வசதிகள் எவ்வாறு இருக்கின்றது?

ப: கோலூன்றிப் பாய்தல் விளையாட்டுக்கு சர்வதேச ரீதியில் பயன்படுத்தும் 'போல்' இனை நாங்களும் பயன்படுத்துகின்றோம். இந்த வசதி யாழ்ப்பாணத்தின் எல்லாப் பாடசாலைகளிலும் கிடையாது. ஒரு 'போல்'இன் செலவு மட்டும் 'ஒரு லட்சம்' ரூபாய். தொடர்ந்து இந்த விளையாட்டில் பிரகாசிக்கும் வீரர்கள் சிலர் சொந்தமாகவே 'போல்' வாங்கி வைத்திருக்கிறார்கள்.

கே: பயிற்சிகள் எவ்வாறான நேரங்களில் வழங்கப்படுகின்றது?


ப: பாடசாலை கல்விச் செயற்பாட்டுக்கு இடையூறில்லா வகையில் காலை 6 முதல் 8 மணி வரையும், மாலை 4 முதல் 6 மணி வரையும் பயிற்சிகளை மேற்கொள்கின்றனர். பயிற்சி நேரத்தில் மாணவர்களுக்கு சத்துணவுகளும் வழங்கப்படுகின்றன.

கே" பயிற்சிகளின் போது எதிர்நோக்கும் இடர்பாடுகள் என்ன?

ப: வீரர்களின் நிறைக்கு ஏற்றது போலவே 'போல்' இனை பயன்படுத்த வேண்டும். இங்கு சகல வயதுப் பிரிவினரும் ஒரே நிறையுள்ள 'போல்' இனையே பயிற்சிக்காக பயன்படுத்துகிறார்கள். மாணவர்களின் பயிற்சிக்காக மேலதிக 'போல்கள்' வாங்க வேண்டும்.

கே: தேசிய மட்டத்திலான போட்டிகளில் கலந்து கொள்ளும் போது நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?

ப: தெளிவான திட்டமிடல்களுடனேயே தேசிய மட்ட போட்டிகள் ஒழுங்கு செய்யப்படுவதால் அதற்கான ஏற்பாடுகளில் எந்த குறையும் இல்லை. மாணவர்களின் போக்குவரத்திற்குத் தான் அதிகளவிலான செலவீனங்கள் ஏற்படுகின்றது. இம்முறை ஏற்பாடுகளைப் போலவே தொடர்ந்தும் அரசாங்கம் வீரர்களுக்கான வசதிகளை வழங்கும் போது எந்த மனக்குறையும் ஏற்படாது.




# உலகத்தரத்தில்

-கோ.கார்த்திகன்

சென்ற இதழின் தொடர்ச்சி...

கேள்வி: உங்களை உலகத் தரத்தில் உருவாக்கியதில் முதன் மையானவர்கள் யாவர்?
பெற்றோர், சகோதரர்களை தவிர உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் என்னை முதன்மைப்படுத்தி ஊக்குவித்ததுண்டு. தேசியஅணியில் இடம்பெற்ற காலத்தில், எனது வேலை தளத்தில் இருந்த பயிற்றுனர் மற்றும் அவ்வப்போது தேசிய அணியின் பயிற் றுனர்களாக இருந்த அனைவரையும் என்னால் நினைவுபடுத்த முடியும். முக்கியமாக என்னை பல்கலைக்கழக அணியிலிருந்து மட்டக்களப்பு மாவட்ட அணிக்கு அழைத்து சென்ற பாத்திமா பிரான் சிஸ் என்பவரும் முக்கியமானவர்.

கேள்வி: பல்கலைக்கழக வாழ்க்கை இந்த விளையாட்டு தொடர் பாக உங்களை பட்டை தீட்ட உதவியதா?
நான் பல்கலைக்கழகத்திற்கு சென்றதுமே அங்கிருந்தவர்கள் நான் நிச்சயம் தேசிய அணிக்கு போவேன் என்று எதிர்பார்த்தார் கள். பல்கலைக்கழக அணியிலிருந்து மட்டக்களப்பு மாவட்ட அணிக்கு விளையாட சந்தர்ப்பம் கிடைத்தது. மாவட்ட அணிக்காக 4 வருடங்கள் விளையாடியிருந்தேன். அத்துடன் பல்கலைக்கழக அணிக்கு தலைமைதாங்கியுள்ளேன். பல்கலைக்கழகங்களிற் கிடையிலான போட்டியில் முதல் முறையாக தமிழ் அணி (எமது அணி) இரண்டாவது இடத்தை பிடித்திருந்தது. அதன்பின் இலங் கை பல்கலைக்கழக அணிக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தேன். அதில் 2005ல் உதவி அணித்தலைவியாகவும் ஆகவும் 2006ல் தலைவியாகவும் செயற்பட்டேன். பல்கலைக்கழகத்திலிருந்து இருந்து தேசிய அணிக்கு தெரிவாகி 2005ல் ஆசிய கிண்ண போட்டியில் 'Best Shooter' விருது பெற்றமைக்காக பல்கலைக் கழக உப வேந்தர் எனக்கு தங்க பதக்கம் அளித்து கௌரவப்படுத் தியமை, பரீட்சை காலங்களில் நண்பர்களின் உதவி முதலானவை முக்கியமாக நினைவு கூரப்படவேண்டியவை. தேசியஅணியில் விளையாடிக்கொண்டு எனது பட்டப்படிப்பை சீராக தொடர கிழக்கு பல்கலைக்கழகம் பூரண ஒத்துழைப்பு வழங்கியிருந்தது.

கேள்வி: உங்களுக்கு இலங்கை தேசிய அணியில் வாய்ப்பு எப் போது கிடைத்தது? எவ்வாறு கிடைத்தது?
2004ல். நான் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த நேரம் மட்டக்களப்பு மாவட்ட அணிக்காக விளையாடியபோதுதான் தேசிய அணிக்காக தெரிவுசெய்யப்பட்டேன். எனது பெறுபேற் றையும் உயரத்தையும் அடிப்படையாக வைத்தே இந்த வாய்ப்பு வழங்கப்பட்டது.

கேள்வி: முதன் முதலாக சர்வதேச போட்டியில் விளையாடிய போது அனுபவம் எப்பிடி இருந்தது?
2005ல் ஆசிய கோப்பைக்காக விளையாடினேன், இறுதிப்போட் டியில் எங்களால் வெல்ல முடியாமை அடுத்து வரும் போட்டிகளுக்கு என்னை நன்றாக தயார் படுத்த வேண்டும் என்ற மனநிலையை உருவாக்கியது.

கேள்வி: 6ஆண்டு காலமாக சர்வதேச போட்டிகளில் விளையாடி-வரும் நீங்கள் விளையாடிய முக்கிய சர்வதேச போட்டிகள் பற்றி சொல்ல முடியுமா?
ஆசிய கோப்பை வெற்றியாளர்கள் 2009. அவ்வப்போது பிற நாடுகளால் ஒழுங்கு படுத்தப்படும் 5 தேசங்களுக்கிடையிலான, 4 தேசங்களுக்கிடையிலான, சுற்றுப்போட்டிகளும் பிற நாடுக-ளுடனான சுற்று பயணங்கள் என்பன குறிப்பிடத்தக்கவை.

கேள்வி: நீங்கள் உலககிண்ண போட்டிகளின் போது 'இணைத் தலைவி' என்றுதானே போட்டிகளில் பங்குபற்றினீர்கள் எப்போது நீங்கள் 'தலைவி' ஆக பதவி உயர்த்தப்பட்டீர்கள். இந்த ஆசியக் கிண்ண போட்டிகளின் போதா?
ஆம். பின்னுக்கு ஒருவர் இணைத்தலைவியாகவும் இருக்கிறார். அவரின் பெயர் காயத்திரி. விளையாட்டுத்துறை அமைச்சின் அனுமதி வெளியாகியபோது இணைத்தலைவி என அறிவித் திருந்ததால் ஊடகங்களும் அதனையே அறித்தன. பின்னர், அவர் கள் என்னை அணித்தலைவியாக நியமித்தனர்.

கேள்வி: கடந்த வருடம் சிங்கப்பூரில் இடம் பெற்ற உலககிண்ண போட்டி உங்களின் முதல் உலககிண்ண போட்டியென நினைக் கிறேன். அதன் அனுபவம் பற்றி கூறுங்களேன்.
ஆம். இலங்கை அணி உலக கோப்பைக்கு தகுதி பெற ஆசிய கோப்பையை வெல்வதோடு, உலக தர பட்டியலில் முன்னிடம் வகிக்க வேண்டும். இந்த உலக கோப்பையின் பின்னர் எங்கள் அணி

14ஆம் இடத்திற்கு முன்னேறியிருந்தது. உலகின் மிக சிறந்த அணிகளுடன் விளையாடி அதிக கோல் போடுவது எனக்கு மிக சவாலாக இருந்தாலும், நான் ஒவ்வொரு போட்டியிலும் மகிழ்ச்சியுடன் பங்கு பற்றினேன்.

கேள்வி: உலக கிண்ண போட்டிகளில் சிறப்பாக ஆடிய உங்களுக்கு சிறப்பு பரிசு எதாவது கிடைத்ததா?
'Best Shooter' விருது கிடைத்தது.

கேள்வி: இந்த ஆசியக்கிண்ணத்தில் இறுதிப் போட்டியில் தோற்றதனால் உலககிண்ணத்திற்கு தகுதி பெறுவதில் சிக்கல் ஏற்படுமா?
உலககிண்ண 2015ல்தானே நடைபெற இருக்கிறது. அதற்கு முதல் 2014ல் அடுத்த ஆசியகிண்ண போட்டிகள் சிங்கப்பூரில் நடைபெற இருக்கின்றது. அதில் முதலிரு இடங்களை பெறும் அணிகள் உலககிண்ண போட்டிகளுக்கு தகுதி பெறும். முதலில் எங்களது இலக்கு 2013ல் இடம்பெறவுள்ள பொதுநலவாய போட்டிகளில் கலந்து கொள்வதுதான். ஆனால் அதற்கு அடுத்தவருடம் மார்ச்சுடன் தரப்படுத்தல்களை நிறுத்துகிறார்கள். அதற்கு முன் நாங்கள் 2 அல்லது 3 தொடர்களில் விளையாட வேண்டும். ஆசியக்கிண்ண போட்டிகளில் இருந்த பயிற்றுவிப்பாளர்களையும் பதவிநீக்கம் செய்திருக்கிறார்கள். எனவே அந்த போட்டிகளிற்கு முதல் வெளிநாட்டிலிருந்து புதிதாக பயிற்சியாளர் நியமிக்கப்படவேண்டும். இவ்வாறு போட்டிகளில் விளையாடி நாங்கள் தரவரி

# நம்மவர்கள் !

## 'உயர்ந்த வனிதை' தர்ஜினியுடன் நேர்காணல்

8வது ஆசிய வலைப்பந்தாட்ட தொடரில் தர்ஜினி, குழுநிலை போட்டிகளில் ஹொங்கொங்கிற்கு எதிராக 75 கோல்களையும் இந்தியாவிற்கெதிராக 53 கோல்களையும் நேபாளத்திற்கெதிராக 58 கோல்களையும், ஜப்பானுக்கெதிராக 52 கோல்களையும் போட்டிருந்தார். அதேபோன்று மலேசிய அணிக்கெதிரான அரையிறுதியில் இலங்கை அணி பெற்ற 67 கோல்களில் 65 கோல்களை இவர் போட்டிருந்த அதே நேரம் இறுதிப்போட்டியில் இலங்கையின் கிண்ணக்கனவு நனவாகாது போனபோதும் இலங்கையணி பெற்ற 47 கோல்களையும் இவரே போட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



சையில் 12ற்குள் வந்தாலே பொதுநலவாய போட்டிகளில் கலந்து கொள்ள முடியும். இதற்கு தென்னாபிரிக்கா, பீஜி, இங்கிலாந்து போன்ற நாடுகளிடம் கேட்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் சிறு பிரச்சினையும் இருக்கிறது. தற்போது உலக தரவரிசையில் முன்னிலையில் இருக்கும் நாடுகள் வேறு நாடுகளுடன் விளையாடி தங்கள் தரவரிசையை குறைக்க கூடிய விசப்பரீட்சையில் இறங்க மாட்டார்கள். தரவரிசையில் வீழ்ந்தால் அவர்களது வாய்ப்பு பறிபோய் விடும்.பார்ப்போம்! அந்த நாடுகள் என்ன பதிலை தருகிறார்கள் என.

கேள்வி: இந்த இறுதிப்போட்டியின் தோல்வி உங்களை எவ்வாறு பாதித்திருக்கிறது? இலங்கையணியின் தற்போதைய தரவரிசை என்ன?
எனக்கு வெறுத்தே போய்விட்டது. வெல்ல வேண்டிய போட்டியை வீணே தாரைவார்த்தது போலாகி விட்டது. தற்போது இலங்கையின் தரவரிசையை பார்க்க கூட மனமில்லை.

கேள்வி: வெளிநாட்டு பிராந்திய அணிகளுக்காக விளையாடுகிறீர்களா?
ஆமாம், அவுஸ்திரேலியாவில் 'சல்கன்' எனும் அணிக்காக விளையாடினேன். 'தேசிய சுற்றுத்தொடராக' மேற்கு அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற அந்த தொடரில் எமது அணியே வெற்றி பெற்றது. இலங்கை வீராங்கனை ஒருவர் அவுஸ்திரேலிய பிராந்திய அணிக்காக விளையாடிய முதல் சந்தர்பம் இதுவென அவர்களே சொன்னார்கள். அத்துடன் "சல்கன்" அணி முதல் தடவையாக இந்த கிண்ணத்தையும் சுவீகரித்தது. அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து இணைந்து நடத்தும் இன்னுமொரு பெரிய சுற்றுத்தொடர் ஒன்று அடுத்த வருடம் மார்ச்சில் நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் எனக்கு கிடைக்கலாம்! மாலைதீவுகளில் இருந்தும் அழைப்பு வந்திருக்கின்றது.

கேள்வி: இலங்கையில் உங்களுக்கான ஊக்குவிப்பும், வரவேற்பும் எப்படியிருக்கின்றது?
தோற்கும் அணியில் இருந்து என்னால், அதிக கோல் சிதறாமல் போட முடிகிறது எனில், எங்கள் அணி கட்டயாம் வெற்றி பெறும் பகுதியில் இருந்திருக்க வேண்டும். எங்கள் தயார் படுத்தலுக்கு அதிக நேரம் கிடைக்கவில்லை. ஊக்குவிப்பு எங்கள் மனதில் தான் உருவாக வேண்டும். நாம் நினைக்கிற இலக்கை ஒரு போதும் தாழ்த்த கூடாது. இலங்கையில் உள்ளூர் வீரர்களுக்கு ஊடகங்கள் இன்னும் கூடுதலான ஊக்குவிப்பை தரலாம்.

கேள்வி : 'கேடயம் சஞ்சிகை' வாசித்திருக்கிறீர்களா? விளையாட்டுத் துறைக்கு நாம் எவ்வாறான பங்களிப்பை வழங்க வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்.
ஆம்! வாசித்திருக்கின்றேன். நல்ல முயற்சி. வாழ்த்துக்கள்! எம்மவர்கள் பலர் தேசியமட்ட போட்டிகளில் தமது திறமைகளை வெளிக்காட்டுகிறார்கள். அவர்கள் பற்றிய செய்திகளை அதிகளவில் நீங்கள் வெளிக்கொண்டுவர வேண்டும். என்னாலான உதவிகளை நான் தொடர்ந்தும் வழங்குவேன். ●

# அடித்தாடத் தெரியாதவருக்கு அணித்தலைவர் பதவி!

**- க.கோபிகிருஷ்ணா**



நியூசிலாந்து அணி இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்வதை எப்போதுமே அந்நாடுகள் சவாலானதாகக் கருதியதில்லை. சுழற்பந்து வீச்சை நியூசிலாந்து அணி சிறப்பாக எதிர்கொள்வதில்லை, இங்குள்ள தட்ப வெப்ப சூழ்நிலைகளுக்கு அவர்கள் பழக்கப்பட்டவர்களில்லை என்பதால் நியூசிலாந்து அணியின் இந்திய உபகண்டச் சுற்றுலாக்கள் அதிகளவு எதிர்பார்ப்பையும் தோற்றுவிப்பதில்லை. ஆனால் அண்மைக்காலத்தில் இந்தியன் பிறீமியர் லீக் போட்டிகளைத் தொடர்ந்து இந்தியாவில் ஏராளமான வெளிநாட்டு வீரர்கள் அதிக போட்டிகளில் பங்குபற்றுவதோடு, முன்னரை விட இப்போது போட்டி அட்டவணைகள் ஓரளவு சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு எல்லா நாடுகளுக்கும் எல்லா நாடுகளும் பயணம் செய்வதை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், முன்னரளவுக்கு நியூசிலாந்து, இங்கிலாந்து போன்ற நாடுகள் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளை பொறிக்கிடங்குகளாகக் கருதுவதில்லை.

இலங்கைக்கு இவ்வருடம் கிரிக்கெட் பயணம் மேற்கொண்டிருந்த இங்கிலாந்து அணி இலங்கைக்கெதிராக 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்று ஒரு போட்டியில் மிகச்சிறப்பான வெற்றியைப் பெற்று 1-1 என்ற கணக்கில் தொடரைச் சமப்படுத்தியிருந்ததோடு, முதலிடத்தையும் அந்நேரத்தில் தக்க வைத்திருந்தது. அத்தொடரின் முதற்போட்டியின் முதல் இனிங்ஸில் மோசமான துடுப்பாட்டத்தை இங்கிலாந்து அணி வெளிப்படுத்தியிருக்காவிடில் சிலவேளை தொடரை வென்றிருக்கவும் வாய்ப்புக்கள் உள்ளன. அதேபோல் அண்மையில் இந்தியாவிற்குப் பயணம் செய்த நியூசிலாந்து அணி 2 டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியடைந்திருந்ததோடு, முதலாவது போட்டியில் இனிங்ஸ் தோல்வியடைந்திருந்த போதிலும், இரண்டாவது போட்டியில் அவ்வணி வெளிப்படுத்திய சிறப்பான ஆட்டம் இந்தியாவை அழுத்தத்திற்குள்ளாக்கியிருந்தது.

நியூசிலாந்து அணி தற்போது இலங்கைக்குக் கிரிக்கெட் பயணம் மேற்கொண்டுள்ளது. இதில் ஒரு டுவென்டி 20 சர்வதேசப் போட்டி, 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 2 டெஸ்ட் போட்டிகள் என இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் இலங்கை அணி இலகுவான வெற்றிகளைப் பெறும் என்ற எதிர்பார்ப்புக் காணப்படுகின்ற போதிலும், இத்தொடரில் ஒரே ஒரு ட்வென்டி 20 சர்வதேசப் போட்டி முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கையின் புதிய ஆரம்பத்திற்காக அடிக்கல் நாட்டப்படும் போட்டியாக அது அமைந்து கொண்டது.

இலங்கையின் 4வது "நிரந்த ட்வென்டி 20" தலைவராக அன்ஜலோ மத்தியூஸ் அப்போட்டியில் பதவியேற்றிருந்தார். அன்ஜலோ மத்தியூஸ் இதற்கு முன்னர் ஒரு ட்வென்டி 20 சர்வதேசப் போட்டியிலும், திலின கண்டம்பி ஒரு போட்டியிலும் தலைவராகக் கடமையாற்றியிருந்த போதிலும் அவை தற்காலிகமாகவே அமைந்திருந்தன. ட்வென்டி 20 சர்வதேசப் போட்டிகளுக்கான தலைமைத்துவம் என இலகுவாக எடுத்துக் கொள்ளப்பட முடியாத மாற்றமாக அந்த மாற்றம் அமைந்துள்ளது. இதன்மூலம் எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் இலங்கை அணியின் 13வது டெஸ்ற் அணித்தலைவராகப் பதவியேற்றும் வாய்ப்பு அன்ஜலோ மத்தியூஸிற்கு ஓரளவிற்கு உறுதியாகியுள்ளது. அவுஸ்ரேலியத் தொடரின் பின்னர் மஹேல ஜெயவர்தன ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், டெஸ்ட் போட்டிகள் ஆகியவற்றின் தலைமைத்துவத்திலிருந்து ஓய்வுபெறுவார் என்பது பரவலான எதிர்பார்ப்பாகக் காணப்படுகிறது.

தலைமைத்துவமென்பது, அதுவும் இலங்கை போன்ற கிரிக்கெட்டினை ஆழமாகப் பின்பற்றுகின்ற நாடொன்றின் தலைவராகப் பதவி வகிப்பதொன்றும் இலகுவானதல்ல. சச்சின் டென்டுல்கர் என்ற மாபெரும் துடுப்பாட்ட வீரன் இந்தியாவின் அணித்தலைமைப் பதவியைப் பெற்று அதன் மூலமாக அழுத்தங்கள் காரணமாக அப்பதவியைத் துறந்தமை அணித்தலைமைத்துவத்தின் கடினத்தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

**அன்ஜலோ மத்தியூஸால் சாதித்துக் காட்ட முடியுமா?**

முடியுமென்ற எதிர்பார்ப்பு ரசிகர்களின், விமர்சகர்களின் மட்டத்தில் பரவலாகக் காணப்படுகின்றது. 19 வயதிற்குட்பட்ட இலங்கை அணியைத் தலைமை தாங்கிய அனுபவம், உள்ளூர்ப் போட்டிகளில் தலைமை தாங்கிய அனுபவம் என்பன அன்ஜலோ மத்தியூஸை ஒரு தலைமைத்துவப் பண்புகள் கொண்டவராக வெளிப்படுத்தியுள்ளன.

நிரந்த அணித்தலைவராக அறிவிக்கப்பட்ட பின்பு இடம்பெற்ற முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பில், "இலங்கை அணியின் வீரர்கள் அடித்தாடும் இயல்பைக் கொண்டிருக்கவில்லை. ஆறு மற்றும் நான்கு ஓட்டங்களை விளாசக்கூடிய இளம் வீரர்களே இலங்கையணிக்குத் தேவை. அன்ஜலோ மத்தியூஸ், மஹேல ஜெயவர்தன போன்றவர்கள் துடுப்பாட்டப் பாணியை மாற்ற முயற்சிக்க வேண்டுமென பிரதம தேர்வாளர் அசந்த டி மெல் சொல்லியிருக்கிறாரே?" என் கேட்கப்பட்ட போது அமைதியான அன்ஜலோ மத்தியூஸ் "ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்துக்கள் உண்டு. அந்தக் கருத்துக்கள் என் துடுப்பாட்டத்தைப் பாதிக்கப் போவதில்லை" எனப் பதிலளித்தமை அன்ஜலோ மத்தியூஸ் என்ற வீரனால் அழுத்தங்களை எதிர்கொள்ள முடியும் என்றே எண்ண வைக்கின்றது.

அவுஸ்ரேலியாவில் வைத்து 2010ம் ஆண்டு லசித் மலிங்கவுடன் இணைந்து 9வது விக்கெட்டுக்காக சாதனை இணைப்பாட்டத்தைப் புரிந்து இலங்கை அணிக்கு நினைத்துப் பார்க்க முடியாத வெற்றியைப் பெற்றுக் கொடுத்த துடுப்பாட்டத்தின் "நான் இங்கு துடுப்பாட்ட வீரர். லசித் மலிங்க ஒரு பந்துவீச்சாளர். எனவே மலிங்கவைச் சரியான முறையில் வழிநடத்த வேண்டிய பொறுப்பு என்னுடையது" என்ற எண்ணத்துடன் அன்ஜலோ மத்தியூஸ் ஒவ்வொரு தடவையும் லசித் மலிங்கவை வழிநடத்தியது பொறுப்புக்கள் வழங்கப்படும் போது அன்ஜலோ மத்தியூஸ் அவற்றைச் சரியாகச் செய்து முடிக்கும் இயல்புடையவர் என்பதை வெளிப்படுத்துகிறது.

அன்ஜலோ மத்தியூஸின் திறமைகளைப் பற்றிக் கதைக்கும் போது, அன்ஜலோ மத்தியூஸ் சில தருணங்களில் மேற்கொள்ளும் மோசமான துடுப்பாட்டப் பிரயோகங்கள் பலரின் நினைவுக்கு வரலாம். முன்னைய துடுப்பாட்டப் பிரயோகங்கள் ஞாபகத்திற்கு வராதுவிடினும், 2012 உலக டுவென்டி 20 தொடரின் இறுதிப் போட்டியில் டெரன் சமியின் பந்துவீச்சில் அவரின் மோசமான துடுப்பாட்டப் பிரயோகத்தின் காரணமாக அவர் ஆட்டமிழந்தமை ஞாபகத்திற்கு வரலாம். ஆனால் "இறுதிப் போட்டியில் நான் முட்டாள்தனமான துடுப்பாட்டப் பிரயோகமொன்றை மேற்கொண்டேன்" என ஊடகவியலாளர் சந்திப்பில் அன்ஜலோ மத்தியூஸ் ஏற்றுக் கொண்டமை அவர் தன் தவறுகளிலிருந்து கற்றுக் கொள்கிறார் அல்லது கற்றுக் கொள்ள முனைகிறார் என்று நம்பிக்கையை விதைக்கிறது.

**அன்ஜலோ மத்தியூஸிற்கான சவால்களும் ஏராளமாக நிறைந்து காணப்படுகின்றன.**

அடுத்த வருடம் அவர் ஒருநாள் சர்வதேசப் போட்டி, டெஸ்ற் போட்டி ஆகியவற்றின் தலைமைப் பொறுப்பை ஏற்பாராயின் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்கும், அதன் பின்னர் 2015ம் ஆண்டு அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்தில் இடம்பெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளுக்கும் தலைமை தாங்கும் பொறுப்பு மத்தியூஸைத் தேடிவரும். ஏற்கனவே 4 இறுதிப் போட்டிகளில் தொடர்ச்சியாக இலங்கை அணி தோல்வியடைந்து அழுத்தங்களை எதிர்கொண்டுவரும் நிலையில், அத்தொடர்கள் மத்தியூஸிற்கு இலகுவானதாக அமையாது, குறிப்பாக ஆடுகள நிலைகள் இலங்கையின் நிலைகளோடு ஒப்பிடும் போது முற்றிலும் வேறானவை என்பது அதிக சவாலானதாக அமையும்.

அணித்தலைமை பற்றிய சவால்கள், அழுத்தங்கள் ஒருபுறமிருக்க, மத்தியூஸ் என்ற திறமையான வீரனின் உடற்தகுதியைக் கவனித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு மத்தியூஸிற்கும், இலங்கைக் கிரிக்கெட் சபைக்கும் காணப்படுகிறது. அண்மைக் காலத்தில் வேகப்பந்து வீசும் சகலதுறை வீரர்களில் ஜக்ஸ் கலிஸைத் தவிர, ஏனையவர்கள் அனைவரும் அடிக்கடி உடல் உபாதைக்குள்ளாகியே தடுமாறியிருக்கிறார்கள். ஷேன் வொற்சன், அன்ஜலோ மத்தியூஸ், இர்பான் பதான் போன்றோர் வெளிப்படையான உதாரணமாகக் காணப்படும் நிலையில், அணியின் தலைவராக மத்தியூஸ் பதவியேற்ற பின்பு அடிக்கடி உபாதைக்குள்ளாகிறானால் அணிக்கு அதிக பாதிப்புக்கள் ஏற்படுமென்பதில் ஐயமில்லை. ஆகவே அன்ஜலோ மத்தியூஸும், இலங்கைக் கிரிக்கெட் சபையும் அந்த விடயத்தில் முழுமையான கவனத்தைச் செலுத்தினால் ஆரம்பமாகியுள்ள புதிய யுகம்




கிரிக்கெட் போட்டிகளில் இனம், மதம், குலம், மொழி என்பன இல்லையென்பது ஒருபுறமிருக்க, இலங்கை சார்பாக அணித்தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் பௌத்தரல்லாத முதலாவது கிரிக்கெட் அணித்தலைவர் அன்ஜலோ மத்தியூஸின் நியமனம் சிலவேளைகளில் சிறுபான்மைச் சமூகத்தினர் மகிழ்வாக வரவேற்றுக்கொள்ளும் ஒன்றாகக் கூட இருக்கலாம். இதே காரணமே சிலவேளைகளில் அவரின் 'அணித்தலைவர்' ஆயுட்காலத்தையும் குறைக்க முனையலாம்! ●




## யாழ்.மாவட்ட ஹொக்கி - உடுவில் மகளிர் சம்பியன்

யாழ் மாவட்ட பாடசாலைக் ஹொக்கிச் சங்கம் நடத்திய 14 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான ஹொக்கிச் சுற்றுப் போட்டிகள் கடந்த மாதம் இடம்பெற்றது. மகளிர் பிரிவில், இறுதிப்போட்டியில் வட்டு.யாழ்ப்பாணக்கல்லூரியும், உடுவில் மகளிர் கல்லூரியும் மோதின. போட்டி சமநிலையில் முடிவடைந்ததால் வழங்கப்பட்ட 'பெனால்டி' வாய்ப்பை சரியாகப்பயன்படுத்திக் கொண்ட உடுவில் மகளிர் அணியினர் 2 : 1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இதேவேளை, ஆண்களுக்கான பிரிவில் இறுதிப்போட்டியில் வட்டு.யாழ்ப்பாணக்கல்லூரியும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதின. இந்தப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1 : 0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

# பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி -2012


- அனுதினன்

அனைத்து பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டிகள் கடந்த மே மாதம் ஆரம்பித்து செப்டெம்பர் மாதத்துடன் நிறைவுக்கு வந்திருக்கிறன. இதில் 331 புள்ளிகளைப் பெற்ற கொழும்பு பல்கலைக்கழக அணி முதல் இடத்தை பெற்றது. தொடர்ந்து 2ஆம், 3ஆம் இடங்களை முறையே மொரட்டுவ மற்றும் பெரதெனியா பல்கலைக்கழக அணிகள் பெற்றுக் கொண்டன. இந்த போட்டித் தொடரில் யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழக அணிகள் முறையே 88 மற்றும் 55 புள்ளிகளுடன் 10ஆம், 11ஆம் இடங்களைப் பெற்றுக்கொண்டன.

வருடா வருடம் பல்கலைக்கழகங்களுக்கு இடையில் நல்லுறவை பேணி, மாணவர்களுக்கிடையில் சிறந்த ஒரு உறவை கட்டியெழுப்புவதுடன், போட்டிதன்மையான சூழல் மூலம் சிறந்த வெளியீடுகளை பெற்றுக்கொள்ளுவதை அடிப்படையாக கொண்டு, இந்த விளையாட்டு போட்டிகள் இடம்பெற்று வருகிறன. இம்முறை 22க்கும் மேற்பட்ட விளையாட்டு நிகழ்ச்சிகள் உள்ளடக்கப்பட்டு, இலங்கையின் 14 பல்கலைக்கழகங்களும் பங்குபற்றியிருந்தன. ஆண்களுக்கான பிரிவு போட்டிகளின் புள்ளிகள் அடிப்படையில் கொழும்பு, மொரட்டுவ,பெரதேனியா பல்கலைக்கழகங்கள் முதல் மூன்று இடங்களையும் பிடிக்க, பெண்களுக்கான பிரிவு போட்டிகளில் கொழும்பு, களனிய, பெரதேனியா பல்கலைக்கழகங்கள் முதல் மூன்று இடங்களையும் பெற்றன.

இந்த வருடத்துக்கான போட்டிகளில் யாழ், கிழக்கு பல்கலைக்கழகங்களில் மட்டுமின்றி கொழும்பு பல்கலைக்கழகம் சார்பாகவும், தமிழ் இளைஞர்கள் அதிகளவில் பங்குபற்றி தங்களை திறமைகளை வெளிகாட்டி இருந்தார்கள்! கொழும்பு பல்கலைகழகத்தின் மெய்வல்லுனர் தலைவராக தமிழ் இளைஞன் ஒருவர் இருந்ததும் விசேட அம்சமாகும்.

இவை மட்டுமல்லாமல், 2013ம் ஆண்டு மிகபெரிய அளவில், பல்கலைக்கழகங்களுக்கு இடையில், ஒலிம்பிக் போட்டிகள் என்று வர்ணிக்க கூடிய, 'SLUG' போட்டி இடம்பெற இருக்கிறது! மூன்று வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் இப்போட்டிகளில் பல்கலைக்கழகங்கள் அனைத்தும் தங்கள் திறமைகளை வெளிகாட்டி வெற்றிபெற இப்போதே தங்கள் பயிற்சிகளை ஆரம்பித்து விட்டன! அது தொடர்பிலும், பல்கலைகழகங்களில் சாதிக்கும் தமிழ் வீர, வீராங்கனைகள் தொடர்பிலும் அடுத்துவரும் 'கேடயம்' இதழ்களில் பார்க்கலாம்! ●





# கராத்தே ஓர் அறிமுகம்

- றொசிஹரிஸ்

கராத்தே என்பது வெற்றி அடைவதும், தோல்வி அடைய செய்வதற்குமான தற்காப்பு கலை (Martial Art) அல்ல. மாறாக, கராத்தே என்பது கடுமையான பயிற்சியின் மூலமும் கடுமையான உழைப்பின் மூலமும் கண்ணிற்கு புலப்படும் மற்றும் கண்ணிற்கு புலப்படாத சவால்களை வெற்றி கொள்வதற்கான ஆற்றலையும் ஆளுமையும் ஏற்படுத்தி கொள்ளும் ஒரு பயிற்சி முறை ஆகும்.

இது தற்காப்புக்கான கலை ஆகும். (It is an art of self-defense) ஒருவர் தனது வெறும் கைகளையும் கால்களையும் சிறந்த முறையில் சக்தி வாய்ந்த ஆயுதமாக பாவித்து எதிரிகள் எதிர்பாராமல் அவர்களின் எதிர்பார்ப்பையும் மீறி உந்துதல் - உதை உத்திகளால் முன்னேறுதலை கராத்தே எனலாம். இதை கை, கால் மற்றும் உடலை எல்லா திசைகளிலும் சீராக அசைதல் மேலும் தாவுதல், வளைதல், சமநிலைப்படுத்தல் போன்ற அனைத்து வகையான உடல் அசைவுகளையும் உள்ளடக்கிய சிறந்த உடற்பயிற்சி முறை எனவும் கூறலாம்.

கராத்தே பயில்பவர் DAN எனும் நிலையை அடையும்போது அவரது உடலானது நன்கு துல்லியமான ஆயுதமாக கருதி பயிறுவிக்கபடும். அவர் எந்த சூழ்நிலையிலும் தனது உடலுறுப்புகளை (கை-கால்) பயன்படுத்தி தற்காத்து கொள்ள கூடியவராக இருப்பார்.

கராத்தேயில் அடிப்படை யுத்திகள் நான்கு வகையாக பிரிக்கப்படும்.

தடுத்தல் (Blocking)
உதைத்தல் (Kicking)
குத்துதல் (Punching)
எதிர்தாக்குதல் (Striking)

கராத்தே போரின் போது மேற்குறிப்பிட்ட நான்கு உத்திகளுடன் பலம், வேகம், நேரக் கணிப்பு, சுவாசம் மற்றும் வலிமையான உணர்வு இருப்பின் மட்டுமே வெல்ல முடியும். இவை மட்டுமில்லாது கராத்தே பயிற்ச்சி ஆனது ஆளுமை சுய திறன் மேம்பாடு என்பவற்றையும் ஏற்படுத்தும். கராத்தே பயிற்சியின் நோக்கம், போட்டியில் ஒரு எதிரியை தோற்கடிப்பது அல்ல, கட்டுக் கோப்பான உடலையும் ஒழுக்கமான ஆளுமை மிக்க மனநிலையும் உருவாக்குதலாகும். ●

The ultimate purpose of karate training is not to defeat an opponent in competition but to develop perfect character, overcoming mental and physical sufferings under rigorous discipline.

# உங்களுடன்..

வணக்கம் வாசகர்களே!

'கேடயம்' இன் வெற்றிகரமான இரண்டாவது இதழில் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. முதலாவது இதழுக்கு நீங்கள் வழங்கிய ஆதரவு எங்களை மேலும் உற்சாகமடையச் செய்திருக்கின்றது. குறிப்பாக, பல பாடசாலைகளிலிருந்து கிடைத்த ஒத்துழைப்புக்கு நாங்கள் என்றும் நன்றியுடையவர்களாவோம். விளையாட்டுத் துறை சார்ந்த அதிகாரிகள், கல்வியலாளர்கள், வீரர்களின் நட்பு மற்றும் ஆதரவு கிடைத்தமை, தொடர்ந்தும் கிடைத்து வருகின்றமை எங்களின் வளர்ச்சிக்கு மேலும் உறுதுணையாக அமைகின்றது.

எங்கள் குறைநிறைகளை உரிமையுடன் சுட்டிக்காட்டிய அனைத்து வாசகர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். குறைகளை எவ்வளவு தூரம் கேட்கின்றோமோ அவ்வளவு தூரம் 'கேடயம்' பலர் கைகளில் தவழ்ந்திருக்கின்றது என்பதனையும் அறிய முடிகின்றது. "எமது வீரர்களின் திறமைகளை அதிகளவில் வெளிச்சம் போட்டுக் காட்டுங்கள்" என்பதே பலரது கோரிக்கையாகவும் இருக்கின்றது. எமது சஞ்சிகையின் நோக்கமும் அதுவே! அதனையே முதலாவது இதழிலும் குறிப்பிட்டு கூறியுள்ளோம். அந்த வகையில் அனைவரது கோரிக்கைகளையும் பூர்த்தி செய்வதாக இனிவரும் இதழ்கள் அமையும் என்பதில் ஐயமில்லை.

முதலாவது இதழினை வாசித்தவர்களுக்கு இந்த இதழ் மாறுபட்டதாக இருக்கும் என நம்புகின்றோம். எம்மவர்கள் பலரின் சாதனைகளை இவ்விதழ் தாங்கி வெளிவந்திருக்கின்றது. மாணவர்களை மையப்படுத்தி வெளியிடப்படும் இந்த மாத இதழில் விளையாட்டுத்துறை சார்ந்த பல செய்திகளோடு மாணவர்கள் படித்துப் பயன்பெறக்கூடிய 'பொது அறிவு' சார்ந்த விளையாட்டு விடயங்களையும் பகுதியளவில் பிரசுரிக்கின்றோம்.

'முழு வர்ணச் சஞ்சிகை'யாக உருவெடுத்த கேடயத்தை தொடர்ந்தும் முழு வர்ணத்தில் கொண்டு செல்வதில் சில இடர்பாடுகள் தோன்றியுள்ளன. இது 'அதிகளவில்' மாணவர்களுக்கான சஞ்சிகை. எல்லா தரப்பு மாணவர்களும் வாங்கி வாசித்து பயன்பெற வேண்டும் என்ற நோக்கோடு சஞ்சிகையின் விலையைக் குறைக்கும் முகமாக கேடயம் வடிவமைப்பில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. பக்கங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த மாற்றம் எமது தொடர்ச்சியான இருப்பை உறுதிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இச்சஞ்சிகை நாடு முழுவதும் தமிழர் பிரதேசங்களில் விற்கப்படுவதால் எமது சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையை விஸ்தரிக்க வேண்டிய உடனடித் தேவை ஏற்பட்டிருக்கின்றது. இதற்கான விளம்பரங்கள் இவ்விதழிலேயே உண்டு. பொருத்தமானவர்கள் விண்ணப்பிப்பதன் மூலம் எமது குழுமத்துடன் இணைந்து 'கேடயம்' இன் வளர்ச்சி படியில் பங்கெடுக்கலாம். கடந்த இதழுக்கு வழங்கிய ஆதரவை இந்த இதழுக்கும் இனிவரவிருக்கின்ற இதழ்களுக்கும் வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் எமது பயணத்தை முன்னெடுக்கின்றோம்.

ஆசிரியர்.


## விற்பனை - சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள் தேவை

யாழ் குடாநாட்டிலிருந்து மாதம் ஒருமுறை வெளிவருகின்ற 'கேடயம்' விளையாட்டுச் சஞ்சிகை நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்படவுள்ளது. இதற்கென வடக்கு, கிழக்கு, கொழும்பு மற்றும் மலையகப் பகுதிகளில் இருந்து விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றார்கள். இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடு முழுவதும் சஞ்சிகையை மொத்தமாகவோ, சில்லறையாகவோ விற்பனை செய்ய முடியும். விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை கீழுள்ள எமது முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறு கோரப்படுகிறீர்கள்.

*கேடயம் சஞ்சிகை,*
*வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு, சுன்னாகம்.*
*மின்னஞ்சல் :* kedayamsp@gmail.com



**கேடயம்** மாத இதழ்

சாந்தினி பதிப்பக வெளியீடு
வட்டுவினி ஒழுங்கை,
இணுவில் மேற்கு, சுன்னாகம்.
தொ.பேசி : (94) 21 4909629
மொபைல் : (94) 757683163
மின்னஞ்சல் : kedayamsp@gmail.com

நிர்வாக இயக்குனர் : திரு.இ.வை.கனகநாயகம்
ஆசிரியர் : க.வரோதயன்
உதவி ஆசிரியர்கள் : கோ.கார்த்திகன், க.யசோதரன்
பக்க வடிவமைப்பு : எஸ்.ஏ.யசீக், க.வரோதயன்
கணனி தட்டச்சு : செ.றொஷானி
அலுவலக உதவி : ப.தக்சன் (கொழும்பு), அ.மேனகா (யாழ்ப்பாணம்), Kss.ராஜ் (வவுனியா)
சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரம் : மு.புவீஸ்வரன், செ.காண்டீபன்
அச்சமைப்பு : ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்

இதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு விளம்பரதாரர்களே பொறுப்பு. கட்டுரைக்கான முழு உரிமையும் கட்டுரையாளர்களையே சாரும்.


# பரிசுப்போட்டி 02

**கேள்வி : 5ஆவது உலகக் கிண்ண ட்வென்டி 20 போட்டிகள் எங்கே நடைபெறவுள்ளது?**

விடை : ..............................................
பெயர் : ..............................................
தொ.பேசி இல : ..............................................
பாடசாலை / ..............................................
கம்பனி : ..............................................
முகவரி : ..............................................
..............................................
ஒப்பம் : ..............................................

**இங்கு வெட்டப்படும் கூப்பன்களுடன் வரும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். விடைகள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி 30.11.2012.**

சரியான விடைகளை எழுதியனுப்பும் ஐந்து அதிஸ்டசாலி வாசகர்களுக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் ரீ-சேர்ட் பரிசாக வழங்கப்படும்.
மேலும் 10 அதிஸ்டசாலி நேயர்களுக்கு 'கேடயம்' மாத இதழின் 1 0 பிரதிகள் இலவசமாக வழங்கப்படும்.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி :
**சாந்தினி பதிப்பகம், வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு, சுன்னாகம்**

## பரிசுப்போட்டி 01 இற்கான சரியான விடை இங்கிலாந்து
## வெற்றி பெற்ற அதிஸ்டசாலி வாசகர்கள்

**ரீ-சேர்ட்களை பரிசாக வென்ற 5 அதிஸ்டசாலி வாசகர்கள்**
01. சி.ராகுலன் - யாழ்.இந்துக் கல்லூரி
02. தி.அனுஜன் - யா.தாவடி இ.த.க.பாடசாலை
03. சி.சிவகணேசன் - யா.கொக்குவில் இந்துக்கல்லூரி
04. ஆர்.பிரணவன் - கொக்குவில் நாமகள் வித்தியாலயம்
05. ச.சிந்துஜன் - அச்சுவேலி இந்துக் கல்லூரி

10 இலவச 'கேடயம்' சஞ்சிகையை வென்ற 10 அதிஸ்டசாலி வாசகர்கள்
01. உ.கார்த்திகன் - யாழ்.இந்துக் கல்லூரி
02. ஜெ.பிரியந்தன் - தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
03. தே.லக்ஸ்மன் - யாழ்.இந்துக் கல்லூரி
04. ஜெ.கிருசாந்தி - யா.வேம்படி மகளிர் பாடசாலை
05. ம.லிந்துசா - யா.இணுவில் மத்திய கல்லூரி
06. எஸ்.ரூபவினோத் - யா.கொக்குவில் இந்துக்கல்லூரி
07. க.சத்தியசீலன் - கொழும்பு இந்துக்கல்லூரி
08. கு.வசந்தன் - பருத்தித்துறை ஹாட்டி கல்லூரி
09. மு.வதனி - யா.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
10. சி.கவிதா - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

பரிசு பெற்றவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் பரிசுகளை பெற்றுக்கொள்ளலாம்.

# சம்பியன் லீக் 2012

-விமல்



இந்த வருடத்திற்கான சம்பியன் லீக் ட்வென்டி 20 போட்டிகள் தென் ஆபிரிக்காவில் நிறைவடைந்துள்ளன. இரண்டு வாரத்திற்கு மேலாக நடை பெற்று வந்த இந்த போட்டித் தொடரில் ஆஸ்திரேலிய பிராந்திய அணியான சிட்னி சிக்சர்ஸ் அணி சம்பியன் ஆகியுள்ளது. ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி தெரிவுப் போட்டிகளுடன் ஆரம்பமான இந்த தொடர் ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி நிறைவுக்கு வந்தது.

இரண்டு அணிகளை தேர்வு செய்வதற்காக நடை பெற்ற தெரிவுப்போட்டிகளில் மொத்தமாக 6 அணிகள் மோதியிருந்தன. அந்த 6 அணிகளும் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு அவைகளுக்கிடையில் லீக் முறையில் போட்டிகள் நடை பெற்றன. போட்டிகளின் நிறைவில், முதல் குழுவில் இருந்து ஓக்லண்ட் அணியும், இரண்டாம் குழுவில் இருந்து யோர்க்க்ஷெயர் அணியும் சம்பியன் லீக் போட்டிகளுக்கு தெரிவாகின. ஏற்கனவே நேரடியாக தெரிவான 8 அணிகளுடன் இந்த இரண்டு அணிகளும் இணைந்து 10 அணிகள் சம்பியன் லீக் போட்டிகளில் மோதின.




இந்த 10 அணிகளும் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டன. அவை தங்களுக்குள் மோதி புள்ளிகளின் அடிப்படையில் இரு குழுக்களிலும் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற அணிகள் அரை இறுதிப் போட்டிகளுக்கு தெரிவாகின. சில போட்டிகள் மழை காரணமாக பாதிக்கப்பட்டன. சில அணிகளுக்கு இது பின்னடைவை கூட தந்திருக்க முடியும். குழு 'ஏ' இல் இந்திய அணிகளான டெல்லி டெயார்டெவில்ஸ், கொல்கொத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் இடம் பிடித்து இருந்தன. தென்ஆபிரிக்கா சார்பாக டைடன்ஸ் அணி குழு 'ஏ' இல் இடம் பிடித்து இருந்தது. ஆஸ்திரேலியா சார்பாக பேர்த் ஸ்கொச்செர்ஸ் அணி விளையாடியது. நியூசிலாந்து சார்பாக தெரிவுப் போட்டிகள் மூலம் வாய்ப்பை பெற்ற ஒக்லாந்து அணி விளையாடியது. குழு 'பி' இல் இந்திய அணிகளான மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்க்ஸ் அணிகள் இடம் பிடித்து இருந்தன. தென் ஆபிரிக்கா சார்பாக லயன்ஸ் அணி 'பி' குழு இல் இடம் பிடித்து இருந்தது. ஆஸ்திரேலியா சார்பாக சிட்னி சிக்சர்ஸ் அணி விளையாடியது. இங்கிலாந்து சார்பாக தெரிவுப் போட்டிகள் மூலம் வாய்ப்பை பெற்ற யோர்க்ஷெயார் அணி விளையாடியது.

குழு ஏ இல் முதலாமிடத்தைப் பெற்ற டெல்லி டெயார்டெவில்ஸ் அணி குழு பி இல் இரண்டாமிடத்தைப் பெற்ற லயன்ஸ் அணியுடன் அரையிறுதியில் மோதி, லயன்ஸ் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது. குழு பி இல் முதலாமிடத்தைப் பெற்ற சிட்னி சிக்சர்ஸ் அணி குழு ஏ இல் இரண்டாமிடத்தைப் பெற்ற டைடன்ஸ் அணியுடன் மோதி சிட்னி சிக்சர்ஸ் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது. இறுதிப் போட்டி 28 ஆம் திகதி தென் ஆபிரிக்கா, ஜோஹனர்ஸ் பேர்க், வொண்டராஸ் மைதானத்தில் நடை பெற்றது. இந்தப் போட்டியில் சிட்னி சிக்சர்ஸ் அணி வெற்றி பெற்றுக் கொண்டது. தாங்கள் விளையாடிய சகல போட்டிகளிலும் அவ்வணி வெற்றி பெற்றுக் கொண்டது. தென் ஆபிரிக்காவில் வைத்து தென் ஆபிரிக்கா அணியான டைடன்ஸ் அணியை வெற்றி பெற்று சம்பியன் ஆனார்கள்.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய லயன்ஸ் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 120 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. ஜீன் சைமஸ் 51 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். ஆரம்ப விக்கெட்டுகள் மிக வேகமாக வீழ்த்தப்பட லயன்ஸ் அணி தடுமாறிப் போனது. பந்து வீச்சில் நேதன் மக்கலம், ஜோஷ் ஹஸல்வூட் ஆகியோர் தலா மூன்று விக்கெட்களைக் கைப்பற்றிக் கொண்டனர். பதிலளித்த சிட்னி சிக்சர்ஸ் அணி விக்கெட் இழப்புக்கள் இன்றி மிக இலகுவாக வெற்றி பெற்றது. 12.3 ஓவர்கள் மாத்திரமே அவர்களுக்கு இந்த இலக்கைப் பெற தேவைப்பட்டது. மிக்கேல் லம்ப் 82 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார் (42 பந்துகள், 8 நான்கு ஓட்டங்கள், 5 ஆறு ஓட்டங்கள்). பிரட் ஹட்டின் 37 ஓட்டங்கள்.

ஆஸ்திரேலிய பிராந்திய அணி சம்பியன் லீக்கில் கிண்ணத்தை சுவீகரித்தமை இது இரண்டாம் தடவையாகும். முதல் சம்பியன் லீக் போட்டி தொடரில் நியூ சவுத்வேல்ஸ் அணி வெற்றி இருந்தது. அதன் பின்னர் சென்னை சுப்பர் கிங்க்ஸ் , மும்பை இந்தியன்ஸ் அணிகள் வெற்றி பெற்று இருந்தன. இம்முறை இந்திய அணியான டெல்லி டெயார் டெவில்ஸ் அணி அரை இறுதி வரை மாத்திரமே முன்னேற முடிந்தது. மற்ற இரு இந்திய அணிகளும் முதல் சுற்றுடன் வெளியேற்றப்பட்டன.

இந்தத் தொடரின் தெரிவுப் போட்டிகளின் மூலம் இலங்கை, மே.தீவுகள், பாகிஸ்தான் ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப் படுத்திய அணிகள் வெளியேறியதால் அந்நாட்டு ரசிகர்களை இத்தொடர் பெரியளவில் ஈர்க்கவில்லை. தவிர, இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்திய நான்கு அணிகளில் எந்தவொரு அணியும் இறுதிப்போட்டிக்கு தெரிவாகாததால் போட்டியின் சுவாரசியமும் இந்திய உபகண்ட ரசிகர்கள் மத்தியில் குறைவாகவே காணப்பட்டது. ●

# விளையாட்டு உணர்வு வெற்றிக்கு வித்திடும்!

**- உசாந்தன்**

கடந்த சில தசாப்தங்கள் வட புலத்தின் ஜீரணிக்க முடியாத காலங்களாக மாறிப் போனமை துரதிஸ்டமே. தேசிய மட்டத்தில், மாகாண மட்டத்தில் சொல்லும் படியான செயற்பாடுகள் எவையுமே இல்லை. ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளாக வடக்கின் பாடசாலைகளும், வீரர்களும் காண்பிக்கின்ற திறமைகளைக் கண்டு மற்றைய மாவட்டங்களெல்லாம் வியந்து நிற்கின்றன. அந்த வகையிலே தான் மானிப்பாய் இந்துவின் உதைபந்தாட்ட வளர்ச்சியும் நோக்கப்படுகின்றது.

2008ம் ஆண்டு முதல் இன்று வரை தேசிய மட்டத்திலே நிலை நாட்டியிருக்கின்ற, நிலை நாட்டிக் கொண்டிருக்கின்ற திறமைகளுக்கு வானமே எல்லை. 2008ம் ஆண்டு இலங்கைப் பாடசாலைகளிற்கிடையிலான உதைபந்தாட்டத் தொடரிலே தேசிய மட்டத்திலே வெற்றி வாகை சூடியமையை யாரும் எளிதில் மறந்து விட முடியாது. நாம் புறக்கணிக்கப் பட்டுவிட்டோம், எங்களிடம் எந்த வித வசதிகளும் இல்லை என்று புலம்புபவர்களுக்கு மானி.இந்துவின் மைந்தர்கள் தந்த முதற்பரிசு 2008ம் ஆண்டிலே தேசிய மட்டத்திலே பெற்றுக்கொண்ட 3ம் இடம்.

தொடர்ச்சியாக 2009ம் ஆண்டு "மைலோ" கிண்ணத்திற்கான பிரிவு 3ன் வெற்றியாளர்களாக வந்து தம்மை நிரூபித்தனர் மானிப்பாய் இந்துவினர். பிரிவு 3ன் தேசிய மட்டத்திலுள்ள ஏனைய பாடசாலைகளையும் அசத்தி வெற்றிக் கிண்ணத்தை கொணர்ந்த போது அவர்களுக்கு வழங்கப்பட்ட வரவேற்பு வார்த்தையால் வடிக்க முடியாதது. 2012ம் ஆண்டிலே தேசிய மட்டத்தில் பெற்ற 3ம் இடமும், 2012ம் ஆண்டிலே தேசிய மட்டத்திலே பெற்ற 2ம் இடமும் அவர்கள் தங்களைத் தாங்களே பட்டை தீட்டியமையைக் காட்டுகின்றது.

அது மட்டுமன்றி 2008ம் ஆண்டிலே எதிரணிகளுக்கு எதிராக மொத்தமாக 92 கோல்களைப் போட்டதுடன் ஒரே ஒரு கோலினை மாத்திரம் எதிரணி பெறுவதற்கும் (தண்டனை உதை) அனுமதித்திருக்கின்றனர் என்றால் வீரர்களின் ஆக்ரோஷமும் விறுவிறுப்பும் எவ்வாறானது என்பதை உணர முடியும். 2010ம் ஆண்டிலே இடம்பெற்ற கொழும்பு சாஹிராக் கல்லூரியின் போட்டித் தொடரிலே "fair play award" தட்டிக் கொண்டமை விளையாட்டு உணர்வினை எந்தளவிலே வீரர்கள் மதித்திருக்கின்றனர் என்பதைக் காட்டுகின்றது.

அது மட்டுமன்றி 2011ம் ஆண்டு கொழும்பு சாஹிராவின் "Plate champions" ஆக தெரிவு செய்யப்பட்டமையும் அவர்களின் வளர்ச்சியினை காட்டி நிற்கின்றது. 2011ம் ஆண்டிலே "super 16" அணிகளிலே மேற்கொள்ளப்பட்ட வாக்களிப்பிலே மானிப்பாய் இந்துவின் உதைபந்தாட்ட அணியினர் முதலிடத்தை தட்டியிருக்கின்றார்கள் என்றால் அவர்கள் எந்தளவு ரசிகர்களின் பக்க பலத்தோடு போட்டிகளிலே கலந்து கொள்கின்றனர் என்பதை கூட உணர முடிகின்றது.

2011ம் ஆண்டின் "மைலோ" கிண்ண பிரிவு 3ற்கான போட்டிகளில் 3ஆம் இடத்தை தட்டி சென்றிருக்கின்றனர். 2010ம் ஆண்டிலே தேசிய மட்ட உதைபந்தாட்ட அணியிலே மானிப்பய் இந்துவின் முன்கள வீரன் கனிஷ்டன் தெரிவு செய்யப்பட்டமை தமிழர்களின் வரப்பிரசாதமே. கொழும்பு சென்.ஜோசப் வித்தியாசாலையின் "Plate champions"ஆகவும், சென். ஜோன்ஸ் கல்லூரி நடாத்திய தேசிய மட்டத்திலான போட்டிகளில் 2ம் இடத்தையும் பெற்று தமக்கான முத்திரையை உதைபந்தாட்ட பக்கங்களிலே பதிந்திருக்கின்றனர்.

தொடர்ச்சி 25ஆம் பக்கத்தில்



# எமக்கு போதிய உபகரணங்கள், பயிற்சிகள் வேண்டும்!



## கிளி. கால்பந்தாட்ட வீரர் பிரபு

- Kss.ராஜ்





இலங்கையின் பல பிரதேசங்களை 'கிரிக்கெட்' ஆக்கிரமித்துள்ள போதும் கிளிநொச்சியில் பரவலாக விளையாடப்படுவது உதைப்பந்தாட்டம் தான். யுத்த மேகங்கள் சூழ்ந்து இருந்த கடந்த காலங்களில் கூட பல உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளன. உதையதாரகை, லக்கிஸ்டார், உழவர் ஒன்றியம், சந்திர உதையா, உருத்திரபுரம் விளையாட்டு கழகம், பிரைஷ்ல் என இங்குள்ள உதைபந்தாட்ட கழகங்களின் வரிசை நீண்டுகொண்டே செல்கின்றது. பல விளையாட்டு வீரர்கள் புலம் பெயர்ந்து சென்றாலும் அடுத்த தலைமுறை விளையாட்டு வீரர்களை உருவாக்குவதில் இந்தக் கழகங்கள் தவறுவதில்லை.

கிளிநொச்சியில் புகழ்பெற்ற கழகங்களில் ஒன்றான உதயதாரகை கழகத்தின் வளர்ந்துவரும் வீரரான சுப்புராசா பிரபு அவர்களை எமது கேடயம் இதழுக்காக சந்தித்த போது,

**கேள்வி :** உங்களை பற்றிய சிறு அறிமுகம் ஒன்றை தாருங்கள்.
**பதில் :** எனது சொந்த இடம் கிளிநொச்சி - மருதநகர். கல்வி கற்றது கிளிநொச்சி மகாவித்தியாலயம். எனக்கு இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரியும் உண்டும்.

**கேள்வி :** உதைபந்தாட்டத்தின் மீது உங்களுக்கு எவ்வாறு ஈடுபாடு வந்தது?
**பதில் :** சிறுவயது முதலே எமது ஊர்க்கழகமான உதயதாரகையின் போட்டிகளைப் பார்த்து வளர்ந்தேன். அதுவே பிற்காலத்தில் என்னை உதைப்பந்து விளையாடும் அளவுக்கு வளர்த்து விட்டது.

**கேள்வி :** உதைபந்தாட்டத்தில் உங்களின் ஆரம்பகால வளர்ச்சிக்கு வழிவகுத்தவர் யார்?
**பதில் :** எனது பாடசாலையின் உதைபந்தாட்ட பயிற்சியாளர் வில்வராசாவின் (தெய்வேந்திரம்) அறிமுகம் கிடைத்தது. அவர் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு சிறந்த உதைபந்தாட்ட வீரர்.
கிளிநொச்சியில் பல புதியவீரர்களை உருவாக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பாடசாலை மாணவர்களிடையே உதைபந்தாட்டத்தில் ஆர்வம் உள்ளவர்களை தேர்ந்தெடுத்து 'அரும்புகள்' என பெயர் சூட்டி அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கினார். எமது அரும்புகள் கிளிநொச்சியில் உதைபந்தாட்ட போட்டிகளில் பல வெற்றிகளை பெற்றது. என்னைப்போல உதைபந்தாட்டத்தின் மீது ஆர்வம் உள்ள பலரை புடம்போட்ட பெருமை திரு.தெய்வேந்திரம் அவர்களையே சாரும். தற்போது அவர் புலம்பெயர்ந்துவிட்டார்.

**கேள்வி :** உதைபந்தாட்டத்தில் உங்களின் அடுத்த கட்டம் எவ்வாறு இருந்தது? அரும்புகள் தொடர்ந்து பல சாதனைகள் படைத்தா?
**பதில் :** இல்லை இந்த நேரத்தில் வன்னியில் போர் உக்கிரமடைந்தால் எம்மால் தொடர்ந்தும் விளையாட்டில் கவனம் செலுத்த முடியவில்லை.

**கேள்வி :** மீண்டும் எப்போது உதைபந்தாட்டம் விளையாட ஆரம்பித்தீர்கள்?
**பதில் :** போர் முடிவுற்று நலன்புரிமுகாமில் வசித்தபோது அங்கே இராணுவத்தால் நடாத்தப்பட்ட பல உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் கலந்துகொண்டு மீண்டும் நான் உதைபந்தாட்டம் விளையாடத் தொடங்கினேன். அங்கே நடாத்தப்பட்ட சுற்றுப்போட்டிகளில் நான் விளையாடிய அணி பல வெற்றிகளைப் பெற்றது. நானும் பல பரிசில்களைப்பெற்றுள்ளேன்.

**கேள்வி :** உதயதாரகை கழகத்தில் எப்போது விளையாட வாய்ப்புக் கிடைத்தது.?
**பதில் :** மீள்குடியேற்றத்தின் பின் மீண்டும் கழகம் இயங்கத்தொடங்கிய போது நான் வளர்ந்துவிட்டதால் என் கழகத்தில் விளையாட வாய்ப்புகிடைத்தது. மீள்குடியேற்றத்தின் பின் முதன் முறையாக கரைச்சி பிரதேசத்தால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் எமது கழகம் கலந்துகொண்டது. இதுதான் என் கழகம் சார்பாக நான் கலந்துகொண்ட முதலாவது சுற்றுப்போட்டி.

**கேள்வி :** சர்வதேச உதைபந்தாட்ட வீரர்களில் உங்களுக்கு பிடித்த வீரர் யார்?
**பதில் :** பிரேசிலின் ரொணால்டோ

**கேள்வி :** தற்போது கிளிநொச்சியில் உதைபந்தாட்டத்திற்கான நிலை எப்படி உள்ளது? உதைபந்தாட்டத்தை வளர்த்து எடுக்க என்ன மாதிரியான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன?
**பதில் :** தற்போது உதைபந்தாட்த்தில் பலருக்கு ஆர்வம் இருந்தாலும் உதைபந்ததாட்டத்திற்கான உபகரணங்கள் பற்றாக் குறையாக உள்ளது. அதைவிட முன்பு இருந்த உதைபந்தாட்ட பயிற்சியாளர்கள் எல்லோறும் புலம் பெயர்ந்துவிட்டனர். எனவே பயிற்சியாளர் பற்றாக்குறையும் உள்ளது. இப்படியான குறைகளை நிவர்த்திசெய்யப்பட வேண்டும். அதிகளவான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளும் நடத்தப்படவேண்டும்.

**நன்றி பிரபு எதிர்காலத்தில் நீங்கள் உதைபந்தாட்ட துறையில் பல சாதனைகள் படைக்க கேடயம் வாழ்த்துகிறது.**

# அசைக்க முடியாத உச்சத்தில் யூனியன் கல்லூரி அணி

# தொடர்ந்தும் 16ஆவது முறை மாகாண சம்பியன்.

- வரோ

**வட மாகாண பாடசாலைகளுக்கிடையே இவ்வருடம் நடைபெற்ற 19 வயதுப்பிரிவினருக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் தெல்லிப் பழை யூனியன் கல்லூரி வெற்றி பெற்று 18ஆவது வருடமாக மாகாண சம்பியனாகியுள்ளது. இவர்கள் தேசிய ரீதியிலும் பல சாதனைகளுக்கு சொந்தக்காரர் கள்.**



Under 19 Girls Netball team 1st place Nothern province 2012

### 2012 ஆம் வருடத்திற்கான சாதனைகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட தேசிய ரீதியிலான வலைப்பந் தாட்டப் போட்டியில் முதல் தடவையாக யாழ் மாவட்ட அணியொன்று முதலிடத்தைப் பிடித் துக்கொண்டது. கடந்த மே மாதம் கொழும்பு மகரகம தேசிய விளையாட்டரங்கில் இடம் பெற்ற இறுதிப்போட்டியில் களுத்துறை மாவட்ட அணியை எதிர்த்து யாழ் மாவட்டத் தை பிரதிநிதித்துவப்படுத்திய யூனியன் கல் லூரி விளையாடியது. விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்தப்போட்டியின் இறுதியில் யூனியன் அணி 42 : 37 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனா-கியது. இந்தத் தொடரில் மொத்தம் 26 அணிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப் பிடத்தக்கதாகும்.

இவ்வருடம் மார்ச் மாதம் இலங்கை வலைப் பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட



Under 15 Girls Table tennis team 2nd place Nothern province 2012

பகிரங்க கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகளிலும் யூனியன் கல்லூரி கலந்து கொண்டு 2ஆம் இடத்தைப் பெற்றது. பலம் வாய்ந்த மியூசியஸ் கல்லூ ரிக்கு எதிராக இடம்பெற்ற இறுதிப்போட்டியில் இரண்டு புள்ளிகள் (23 : 21) வித்தியாசத்தில் சம்பியன் பட்டத்தை யூனியன் நழுவவிட்டது. இதேபோல் இவ்வருடத்திற்கான 'மைலோ' வெற்றிக்கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டி களிலும் யூனியன் கல்லூரி அணி இரண் டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இதேவேளை கடந்த யூலை மாதம் மக்கள் வங்கியின் அனுசரணையுடன் இலங்கை வலைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட தேசிய மட்டத்திலான வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரிலும் யூனியன் கல்லூரி அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. கண்டி நாவலப்பிட்டி மைதானத் தில் இடம்பெற்ற கொழும்பு தெரிவு அணிக்கு எதிரான இறுதியாட்டத்தில் யூனியன் அணி வெற்றியைக் கை நழுவவிட்டது. இந்தத் தொடரில். இதற்கு முன்னர் இடம்பெற்ற பரபரப்பான அரையிறுதி ஆட்டம் ஒன்றில் யூனியன் கல்லூரி அணி குருநாகல் கன் னியர்மடம் அணியை மேலதிக நேரத்தில் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு தகுதி பெற் றமை குறிப்பிடத்தக்கதாகும்.


தொடர்ந்து தேசியமட்டத்தில் அசத்திவரும் யூனியன் கல்லூரி அணிக்கு சர்வதேச மட் டத்திலிருந்தும் சினேகபூர்வ அழைப்புக்கள் கிடைக்கின்றன. கடந்த 2008ஆம் ஆண்டு மலேசியா சென்ற இவ்வணி அங்கு வெவ் வேறு நாடுகளைச் சேர்ந்த 150 அணிகள் பங்குபற்றிய போட்டித்தொடரில் கால் இறுதி வரை முன்னேறி தோல்வியைத் தழுவியிருந் தது. கடந்த 2010ஆம் ஆண்டும் யூனியன் கல்லூரி அணி மலேசியா சென்றது. திறமை களை வெளிப்படுத்தும் வீராங்கனைகள் 19 வயதுக்குட்பட்ட தேசிய அணியிலும் இடம் பிடிக்கின்றனர்.

இவர்களுடைய வெற்றிக்கு கடந்த 20 வருடங்களாக யூனியன் கல்லூரியின்

வலைப்பந்தாட்டப் பயிற்றுவிப்பாளராக கட மையாற்றும் ஜயந்தி ஜயதரன் முக்கிய கார ணகர்த்தாவாக விளக்குகின்றார். தவிர, பாட சாலையின் கடந்தகால அதிபர்கள் மற்றும் இன்றைய அதிபர், ஆசிரியர்கள், யாழ். பழைய மாணவர்கள், கொழும்பு மற்றும் புலம்பெயர்ந்த பழைய மாணவர்கள் ஆகி யோரின் பங்களிப்பு அதிகளவில் காணப் படுகின்றது.



Under 19 Girls Table tennis team 1st place Nothern province 2012



# 'ட்வென்டி 20' போட்டிகளால் டெஸ்ட் போட்டிகளுக்கு சோதன

- ஏ.ஆர்.வி.லோஷன்

> வீரர்கள் தமது தெரிவின் அழுப்படையில் தாய் நாட்டுக்கு விளையாடுவதைத் தவிர்த்து கழக அணிகளுக்காக விளையாடுவதைக் காண்கிறோம். தேச அணிக்காக விளையாடும்போது வருகின்ற உபாதை அல்லது காயம், காசுக்காக விளையாடும் கழக அணிகளுக்காக விளையாடும்போது இல்லாமல் போவதையும் காண்கிறோம்.

சர்வதேசக் கிரிக்கட்டில் கடந்த சில வருடங்களாகவே விவாதங்கள், விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகின்ற ஒரு விடயம், ட்வென்டி 20 போட்டிகளின் வளர்ச்சியும், டெஸ்ட் போட்டிகளின் மீதான ரசிகர்கள் முக்கியமாக வீரர்களின் ஈடுபாட்டுக் குறைவும். ஐந்து நாட்கள் இழுக்கின்ற ஒரு விடயத்தை விட ஒரு விரைவு உணவுப் பதார்த்தம் போல, விறு விறு சுறு சுறு என்று நான்கு மணி நேரத்தினுள் முடிந்து விடுகிற இந்த வேக, அதிவிரைவு ட்வென்டி 20 போட்டிகள் பலரையும் கவர்வதற்கு நேரக் குறைவு மட்டுமே காரணம் என்று நினைத்தால் அதை விட முட்டாள்தனம் என்று எதுவுமே கிடையாது.

ஆறு, ஏழு வருடங்கள் மட்டுமே சர்வதேச கிரிக்கெட் அனுபவமுடைய 'ட்வென்டி 20' கிரிக்கெட், நூறாண்டுகளையும் தாண்டிய பழமையுடைய டெஸ்ட் கிரிக்கெட்டையோ, நான்கு தசாப்தகாலப் பழம்பெருமையுடைய ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட்டையோ விழுங்கி ஏப்பம் விட்டுவிடும் என்று பலரும் அச்சப்படுகிறார்கள் அவசர அவசரமாக மாற்றுவழிகளை யோசிக்கிறார்கள் என்றால் இந்த ட்வென்டி 20 இலுள்ள கவரக்கூடிய கூறுகளையும், அவை ஒருநாள் சர்வதேச, டெஸ்ட் போட்டிகளில் இல்லையா என்பதையும் நோக்க வேண்டும்.

கண்காட்சி, கேளிக்கைப் போட்டிகளாக ஆரம்பத்தில் நினைக்கப்பட்ட இந்த ட்வென்டி 20 கிரிக்கெட் முதலாவது உலக ட்வென்டி 20 கிரிக்கெட் கிண்ணத் தொடரைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டு இப்போது உலக கிரிக்கெட் வீரர்களை வியாபாரப் பண்டங்களாக்கி, உலக கிரிக்கெட்டையே தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு இந்திய கிரிக்கெட் சபை பயன்படுத்திய மாயாஜாலமான IPL உடன் சர்வதேச கிரிக்கெட்டின் தவிர்க்க முடியாத அடையாளமாக மாறிப்போனது.

IPL தந்த வியாபார ரீதியான வெற்றிகளும், குவித்த அனுசரணையாளர்களும், தொலைக்காட்சியூடான மிக அதீதமான விளம்பர வருமானமும் ட்வென்டி 20 கிரிக்கெட்டை வேறெப்போதும் கிரிக்கெட் தராத வியாபார வசீகரமாக மாற்றியமைத்தது. கிரிக்கெட் நட்சத்திரங்கள் வசூல் ராஜாக்களாகவும், கிரிக்கெட் அணிகள் பணம் கொழிக்கும் பண ஆலைகளாகவும் மாறின. ஆறு ஓட்டங்களை அதிரடியாகக் குவிக்கக் கூடியவர்கள் எக்கச்சக்க விலைக்கு விலை போயினர்.

முழுமையான கிரிக்கெட் வீரர்கள் என்று ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் எல்லாம் அதிரடிக்காகவும், குறுகிய நேரத்தில் காட்டக்கூடிய வீரர்கள், பந்துவீச்சில் திறமையை விட, சாமர்த்தியத்தைக் காட்டக் கூடியவர்கள் விரைவாகவே பிரபல்ய வெளிச்சம் பட்டு, மில்லியன் கணக்கில் உழைக்கும் வியாபாரிகள் ஆனார்கள்.

பாருங்கள்.. தேசிய அணியில் நிரந்தர இடத்தை முக்கியமான வகையான கிரிக்கெட்டான டெஸ்ட் கிரிக்கெட்டில் பிடிக்க முடியாத வீரர்கள் எல்லாரும் உலகம் சுற்றி உலகின் அத்தனை நாடுகளின் ட்வென்டி 20 லீக் போட்டிகளிலும் விளையாடிப் பணத்தை அள்ளுகிறார்கள். கெரோன் போலார்ட், ரவிந்திர ஜடேஜா, அல்பி மோர்கல், ரோஹித் ஷர்மா இவர்கள் எல்லாரும் சர்வதேச நட்சத்திரங்கள்... தரமான முறையில் கிரிக்கெட் விளையாடும் நேர்த்தியான வீரர்கள் வாழ்க்கையோடு போராடும் நிலை.



சரி, அந்த வீரர்கள் ட்வென்டி 20 போட்டிகளில் விளையாடினாலும், தங்களையும் மாற்றிக்கொள்ளவேண்டும்.. variety, improvisation இப்படியான பதங்கள் மூலமாக தங்கள் சுயத்தை இழந்து டெஸ்ட் போட்டிகளில் பந்துவீசும் போதும் தப்பித்தலை நோக்காகக் கொள்கிறார்களே தவிர, டெஸ்ட் போட்டிகளை வென்றெடுப்பதற்கான முனைப்பை எடுப்பது கிடையாது. அதேபோல துடுப்பாட்ட வீரர்களும் வேக ஓட்டக் குவிப்பை முனைபாகக் கொண்டு ஐந்து நாட்கள் - அணிக்கான வெற்றி என்பதைத் தங்கள் மன நிலையிலிருந்து பின் தள்ளி விடுகிறார்கள்.

சம்பாதிப்பதை கூடுமானவரை விரைவாக "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவேண்டும்" என்ற கொள்கையுடன் இளம் வீரர்களும் இப்போதெல்லாம் பின்பற்றுவதால் தேசமா, கழகமா என்ற போட்டியில் கிரிக்கெட் கயிறிழுப்பாக மாறியதை அண்மைக்காலத்தில் அவதானிக்கிறோம்.

தனை[?]

இதைத் தான் டெஸ்ட் கிரிக்கெட்டின் பாதிப்பு என்று நீண்ட காலத்தின் அடிப்படியில் நாங்கள் கருதவேண்டி இருக்கும்.

அதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் குறித்த வயதுக்கு முன்பாகவே டெஸ்ட் அல்லது ஒரு நாள் போட்டிகளில் இருந்து விருப்பின் அடிப்படையில் ஓய்வை அறிவித்து ட்வெண்டி 20 போட்டிகளில் மட்டும் விளையாடும் வீரர்களைப் பார்த்திருக்கிறோம் அல்லது தமது தெரிவின் அடிப்படையில் தாய் நாட்டுக்கு விளையாடுவதைத் தவிர்த்து கழக அணிகளுக்காக விளையாடுவதைக் காண்கிறோம். தேச அணிக்காக விளையாடும்போது வருகின்ற உபாதை அல்லது காயம் காசுக்காக விளையாடும் கழக அணிகளுக்காக விளையாடும்போது இல்லாமல் போவதையும் காண்கிறோம்.




இவை மட்டுமன்றி ஐந்து நாள் கொண்ட டெஸ்ட் போட்டிகளுக்காக மைதானங்களுக்கு வருகின்ற ரசிகர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதையும், ட்வெண்டி 20 போட்டிகளினைப் பார்க்க மைதானங்களில் திரளும் ரசிகர்களின் எண்ணிக்கையையும் பார்க்கையில் ஒரு கிலேசம் வருவது இயற்கை தான். ஆனால் உண்மையில் பயம் வரவேண்டியது ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளுக்குத் தான். அண்மைக் காலத்தில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கு செய்யப்பட்டுவரும் விதிமுறை மாற்றங்கள், சீர்திருத்தங்கள் ஆகியவற்றைப் பார்க்கையிலேயே இந்த உண்மை வெளியாகும்.

டெஸ்ட் போட்டிகள் கிரிக்கெட் வீரர்களின் மனவுறுதி, நின்று நிலைக்கும் திறன் ஆகியவற்றை சோதிக்கும் ஒரு விடயம்.. இதனால் தான் கிரிக்கெட் வீரர்கள் அனைவருமே கிரிக்கெட்டின் மகத்துவமாக, தங்கள் கிரிக்கெட் வாழ்வின் உச்சபட்சமான விடயமாக டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதைக் கருதுகிறார்கள். ஆனால் ஒரு நாள் போட்டிகள், ட்வெண்டி 20 போட்டிகளில் விரைவுக்கான பந்தயமாக, குறைவான நேரத்தில் தம் ஆற்றல்களைக் காட்டுவதாக அமைந்திருப்பதால் ரசிகர்களின் கவர்ச்சியும் , விளம்பர ஈர்ப்பும் இருக்கத் தான் போகிறது. ஆனால் கடந்த வருடத்திலும், இந்த வருடத்திலும் இடம்பெற்ற சில டெஸ்ட் போட்டிகள் மிக விறுவிறுப்பானவையாக அமைந்து ரசிகர்களை ஈர்த்தமையும் இங்கே குறிப்பிடத்தக்கவொன்று.

ஆனால் இப்போது கிடைத்தவரை எடுத்துக்கொள்ளலாம் எனும் போக்கில் உலகின் எல்லா நாடுகளுமே வியாபாரம், வணிகம், விளம்பரங்களை மையப்படுத்தி ஒவ்வொரு பிரீமியர் லீக்குகளையும், பிக் பாஷ் களையும் நடத்தி வருவது அதீதமான அளவுக்கதிகமான திகட்டும் தன்மையை ரசிகர்களுக்குத் தந்துவிடுமோ என்பது தான் இப்போதைய கேள்வியாக இருக்கிறது.

இரு வருடத்துக்கு ஒரு உலகக் கிண்ணமும், ஒரே ஆண்டில் ஐந்து நாடுகளின் பணம் கொழிக்கும் லீக்குகளும், இதை விட மேலதிகமாக அதற்கு மேல் ஒரு சாம்பியன் லீக்கும் என்று வருடத்தின் அநேகமான மாதங்களில் ட்வெண்டி 20 மழை தான். டெஸ்ட் போட்டிகளுக்கு சோதனையாக அமையுமா என்று பலர் யோசிக்கின்ற ட்வெண்டி 20 போட்டிகளின் எதிர்காலம் எப்படி என்று நாம் சில ஆண்டுகள் வரை காத்திருந்து பார்ப்போம்.



# 19 வயதுக்குட்பட்டோர் உதைப்பந்தாட்டம் மன்னார் புனித சவேரியர் முதலிடம்



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி

இவ்வருடம் இலங்கை பாடசாலைகளின் 19 வயதுக்குட்பட்டோருக்கான கால்பந்தாட்ட அணிகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டித் தொடரில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது. இந்த சுற்றுப்போட்டியின் முதலாவது போட்டியில் லுகுணுகலை மகாவித்தியாலயத்தை 4-0 என்ற கோல் கணக்கிலும் , இரண்டாவது போட்டியில் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியை 3-1 என்ற கோல் கணக்கிலும் புனித சவேரியார் கல்லூரி தோற்கடித்தது. பின்னர் காலிறுதியில் கொழும்பு சாகிரா கல்லூரியை 1-0 என்ற கோல் கணக்கிலும், அரையிறுதியில் மாத்தறை புனித தோமையார் கல்லூரியை 4-0 என்ற கோல் கணக்கிலும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

## இரண்டாம் இடம் பெற்றது மானிப்பாய் இந்து.

– கிஷோர்

களுத்துறையில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் வட மாகாணத்திலிருந்து தேசிய போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட இரு அணிகளான மன்னார் சவேரியார் கல்லூரியும், யாழ் மானிப்பாய் இந்துக்கல்லூரியும் மோதியது சிறப்பம்சமாக இருந்தது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த இறுதிப்போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக்கல்லூரியை வீழ்த்திய மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி தேசிய சம்பியனானது.

கோல் விபரம் (13ஆவது நிமிடத்தில் விமல், 52ஆவது நிமிடத்தில் ஜோன்சன், 59ஆவது நிமிடத்தில் ஜக்சன், 62 நிமிடத்தில் ஜோன்சன்). தேசிய கோப்பையை கைப்பற்றி மன்னார் திரும்பிய வீரர்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. மன்னார் கல்வி அதிகாரிகள், ராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், ஆசிரியர்கள் அனைவரும் மன்னார் நகரில் ஒன்று கூடி வாழ்த்து தெரிவித்தனர். அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளில் வழிநெடுக பாடசாலை நோக்கி கௌரவிக்கப்பட்டு அழைத்துச்செல்லப்பட்ட வீரர்களுக்கு, பாதையின் இருமருங்கிலும் ஏனைய பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் கூடி நின்று கைதட்டி ஆரவாரம் செய்து தங்கள் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டனர். ஏராளமான தடவைகள் வெவ்வேறு வயது பிரிவுகளில் இலங்கையின் தேசிய சம்பியன்கள் என்ற பட்டத்தை வென்றிருக்கும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரிக்கு இந்த வெற்றி 19வயது பிரிவின் கீழ் தொடர்ச்சியான மூன்றாவது வருட வெற்றியாகும்.

இந்த சம்பியன் அணிக்கு கில்மன் சொய்சா தலைவராக செயற்பட்டார். இவர் 19 வயதுக்குட்பட்ட இலங்கை தேசிய அணியில் ஆடும் வீரராவார். இந்த வெற்றிக்கு அணியின் பயிற்றுவிப்பாளர் திரு.ஞான்ராஜ் அவர்களின் பங்களிப்பு முகவும் முக்கியமான-தாகும். பத்து வருடங்களுக்கு மேலாக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரிக்கு பயிற்றுவிப்பாளராக இருக்கும் திரு. ஞான்ராஜ், இந்த வருடம் இலங்கை தேசிய 19 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணிக்கான பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டு தற்போது இலங்கை அணியினருடன் பயிற்சி மற்றும் போட்டிகளுக்காக ஈரானில் உள்ளார். ●



மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆண்கள் அணி

# 33 வருடங்களின் பின்னர் உலகக் கிண்ணம் வென்ற கரீபியன் தீவுகள்

- மைந்தன்சிவா

1979 ஆம் ஆண்டுக்கு பின்னர் உலக கிண்ணப்போட்டி தொடர் ஒன்றின் இறுதிப்போட்டியில் வெற்றிபெற்று உலகக்கிண்ணத்தை கைப்பற்றியிருக்கிறது மேற்கிந்திய தீவுகள் கிரிக்கட் அணி. 4ஆவது 'ட்வென்டி 20' உலக கிண்ணப் போட்டியின் இறுதிப்போட்டியில் இலங்கையணியை 36 ஓட்டங்களால் வெற்றி கொண்டதன் மூலம் இந்த கிண்ணத்தை 30 ஆண்டுகளுக்கும் மேலான காத்திருப்புகளுக்கு பரிசாக தனதாக்கியது மே. தீவுகள்.

இந்த தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னர் 'அரையிறுதியில் நுழையும் அணிகள்' பற்றிய கருத்துக்கணிப்புக்களில் கூட மேற்கிந்திய தீவுகளை பெரும்பான்மையானோர் கணக்கில் எடுக்கவில்லை. இருந்தும், எல்லோரும் எதிர்வுகூறியது போலவே 'கெய்ல் விஸ்வரூபம் எடுத்தால்!' என்பதற்கு இணங்க அதிரடி வீரர் கிறிஸ் கெய்லின் துணையுடன் இறுதிப்போட்டி வரை நுழைந்தது மே.தீவுகள். இறுதிப்போட்டியில் கெய்ல் சறுக்கினாலும் சாமுவேல்ஸின் அதிரடியுடன் இலங்கை அணியின் கிண்ணக் கனவை தகர்த்து 33 வருட கால வேட்கையை மே.தீவுகள் தீர்த்துக் கொண்டது. இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக சாமுவேல்சும், ட்வென்டி 20 தொடரின் நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் ஷேன் வாட்சனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



கரீபியனின் வளர்ந்து வரும் கிரிக்கட் வீரர்களுக்கும், ரசிகர்களுக்கும் இப்போது புதிய ஹீரோக்கள் கிடைத்துவிட்டனர். இத்தனை காலமாக விவியன் ரிச்சர்ட்ஸ், கொட்னி வால்ஷ், கிளைவ் லோயிட், பிறைன் லாரா போன்றோரையே 80-90 களில் ஹீரோவாக கொண்டிருந்தனர். இப்போது உலக கிண்ணத்தை பெற்று கொடுத்ததை அடுத்து கிரிக்கட் மோகம் இன்னமும் மேற்கிந்திய தீவுகளில் துளிர் விட்டு விருட்சமாக போகிறது என்பது மட்டும் திண்ணம். இலங்கை அணி தொடர்ச்சியாக இறுதிப்போட்டிகளுக்கு வருவதும் தோற்றுப்போய் வெளியேறுவதுமாக ஒருவித மனநிலை சம்பந்தப்பட்ட பிரச்சனையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ என்று எண்ண வைக்கின்றனர். ஆனால் தொடர்ச்சியாக உலககிண்ண போட்டிகளில் இலங்கை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவதை மறுக்கமுடியாது.



ட்வென்டி 20

ஆடவர் உலககிண்ணம் ஒருபக்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் மறுபக்கம் மகளிர் உலகக்கிண்ண 'ட்வென்டி 20' போட்டிகளும் இலங்கையில் நடைபெற்றிருந்தன. முழுவதும் பகல் போட்டிகளாக நடைபெற்றன இந்த தொடரில் இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, மேற்கிந்தியதீவுகள், நியூசிலாந்து, பாகிஸ்தான் என 8 அணிகள் போட்டியிட்டன. அவுஸ்திரேலிய மற்றும் இங்கிலாந்து மகளிர் அணிகள் பங்குபற்றிய இறுதிப்போட்டியில், அவுஸ்திரேலிய மகளிர் அணியினர் நான்கு ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினர். போட்டியின் நாயகியாக அவுஸ்திரேலியாவின் கமெரூனும், தொடர் நாயகியாக இங்கிலாந்தின் எட்வார்ட்ஸும் தெரிவுசெய்யப்பட்டனர்.

**போட்டித் தொடரின் சுவாரசியங்கள் சில:**

அவுஸ்திரேலிய மகளிர் அணி தொடர்ச்சியாக கைபெற்றும் இரண்டாவது உலககிண்ணம் இதுவாகும்.

முதற்சுற்று - குழு நிலை போட்டிகளில் இங்கிலாந்துடன் 144 ஓட்டங்களை குவித்தும் கூட ஏழுவிக்கட்டுகளால் தோல்வியைத்தழுவி இருந்தது அவுஸ்திரேலியா.

இங்கிலாந்தே கிண்ணத்தை கைப்பற்றும் என பலராலும் எதிர்பார்க்கப்பட்டிருக்க இறுதிப்பந்தில் 06 ஓட்டங்கள் தேவை என்கின்ற நிலைக்கு இங்கிலாந்தை தள்ளி ஒரு ஓட்டத்தை மட்டுமே விட்டுக் கொடுத்து அவுஸ்திரேலியா வெற்றியை ரசித்தது .

இந்த ஆண்டில் இங்கிலாந்து மகளிர் அணி தோற்ற இரண்டாவது ட்வென்டி 20 போட்டி இதுவாகும்.

ஆக மொத்தத்தில் ட்வென்டி 20 உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் "நீல வர்ண" அணிகளே வெற்றி பெரும் என பலமாக நம்பப்பட்ட போதிலும் கூட, நம்பிக்கைகளை உடைத்தெறிந்து மேற்கிந்திய தீவுகள் அணியும், அவுஸ்திரேலிய பெண்கள் அணியும் சாம்பியன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டன.

# சாதனை நாயகன்

- தி.தரணீதரன்

கிரிக்கெட்டில் சாதனைகளால் வாழ்ந்தவர். சோதனைகளையெல்லாம் வென்று சாதனையாக்கியவர். வேதனைகளால் வெந்து நொந்து போனவர்களுக்கு மத்தியிலே தன் சாதனைகளால் 'சச்சின்' எனும் பெயரை உலகெங்கும் உச்சரிக்க செய்த இந்த சாதனை நாயகனை இப்போது சோதனைகளே அதிகமாய் சூழ்ந்து நிற்கிறது. கிரிக்கெட்டை நேசிக்க மறுத்தவர்களும், வெறுத்தவர்களும் கூட கிரிக்கெட்டை ரசிக்க வைத்த பெருமை இந்த சச்சின் என்கின்ற மதிநுட்ப வீரனுக்கு இருந்தது. கிரிக்கெட்டின் கடவுள் என்று இந்தியர்களால் கைகூப்பி வணங்கபட்டவர் என்றாலும் அது மிகையல்ல. ஆனால், அதே சச்சின் இப்போது தன் கிரிக்கெட் பயண பாதையில் மிகபெரும் அழுத்தங்களுக்கு உள்ளாகியிருக்கிறார் / உள்ளாக்கபட்டிருக்கிறார் .

ஒவ்வொரு சாதனையாளனும் அவர்தம் சாதனைகளின் பிற்பகுதியில் சோதனைகளால் சூழப்பட்ட வரலாறுகள் அதிகமாய் நேர்ந்திருக்கிறது. அதுவும் கிரிக்கெட்டில் பல கனவு நாயகர்கள் இவ்வாறு மனதுவிட்டகலாத வேதனைக-ளோடுதான் விடைகொடுத்தார்கள் இந்த கிரிக்கெட்டுக்கு. அது ஒருபோதும் சச்சினுக்கு நேர்ந்துவிடக்கூடாது




என்பதில் சச்சின் அக்கைறை கொள்ளாவிடினும் சச்சினை நேசித்த பன்னாட்டு கிரிக்கெட் பிரியர்கள் பல நாட்கள் சிந்தித்தார்கள். இப்போது எல்லாவற்றுக்கும் மேலாக சச்சின் ஓய்வு என்பது தானாக விரும்பாவிட்டாலும், 'விருப்புடன் விடைகொள்கிறேன்' என்று வெறும்பேச்சு பேசவைக்க போகிறது சச்சினுக்கு .

'சச்சின் எதற்கு இனிமேலும் கிரிக்கெட்டுக்கு ...???', 'எப்பதான் இவர் ஓய்வு பெறுவார்..??' என்ற கேள்விகள் தான் அதிகமானவர்களால் உச்சரிக்கபட்டிருக்கிறது. சச்சினின் ஓய்வு என்பது வெகு தொலைவில் இல்லை என்றாலும் அதற்கு சரியான தருணம் இதுவல்ல என்பதுதான் உண்மையானது .கிரிக்கெட்டின் அத்தனை அத்தியாயங்களுக்கும் அர்த்தம் சொன்னவர், அரங்கங்கள் பலவற்றில் தன் பெயர் சொல்ல வைத்தவர், சதத்திலேயே சதம் கண்டவர், சங்கடங்களையெல்லாம் சாதனையாகியவர், எட்ட முடியாத எல்லையெல்லாம் தொட்டுவிட்ட இந்த கனவானுக்கு 'எப்போது ஓய்வு பெறவேண்டும் என்பது மட்டும் இத்தனை நாட்களாய் தெரியாமலா இருந்தது' என்பதுவே வியப்பாய் நோக்கபடுகிறது.

சச்சின் இல்லாத இந்திய கிரிக்கேட்டை நினைத்து பார்க்கவே முடியாது என்று சொல்லகின்ற ஒரு தரப்பு வாதமும், சச்சின் ஓய்வு பெறவேண்டிய நேரம் வந்து விட்டது என்கின்ற மறுதரப்பு வாதத்துக்குள்ளும் இப்போது மாட்டிக்கொண்டுவிட்டார் இந்த மாபெரும் கிரிக்கெட் மேதை. சர்வதேச கிரிக்கெட் மறந்து விட்ட பல நாயகர்கள் எல்லாம் சச்சினின் ஓய்வு பற்றி பேசியே தாங்களும் இருக்கிறோம் என்று தம் ரசிகர்களுக்கு காட்டிகொண்ட சம்பவங்களும் அதிகமாய் அண்மைய நாட்களில் நடந்திருக்கிறது.

## சோதனையின் உச்சத்தில்..



சச்சின் ஓய்வு எப்போது என்பதை தீர்மானிக்கின்ற ஒரேயொருவர் சச்சின் மட்டுமே என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். இளையவர்களுக்கு வாய்ப்பை கொடுத்து உடனடி ஓய்வு இவருக்கு தேவை என்றவர்களும் இருக்கிறார்கள் தான். இவற்றையெல்லாம் புறந்தள்ளிவைத்து கொண்டு எதற்காக இந்த கேள்வி உச்சத்தில் உலாவருகிறது என்று பார்க்க வேண்டிய தருணம் நமக்குரியது.

பொதுவாகவே இந்திய கிரிகெட் என்பது ஒருவரது சாதனைகளுக்ககவே அவரை வாழவைத்து கொண்டிருப்பது. சச்சின் செய்த சாதனைகளுக்காகவே அவரை ஒதுக்கி வைக்க முடியாத தேவை இந்திய கிரிக்கெட் தேர்வாளர்களுக்கு இருந்திருக்கிறது. சச்சின் தானாக ஓய்வு பெற்றுவிட்டால் நமக்கு ஒன்றும் சிக்கல் இல்லை என்று சிந்தித்த தேர்வாளர்களும் இருந்திருக்கிறார்கள். ஆனால் அதற்கான பச்சை கொடி இந்த உச்சத்திடமிருந்து பலநாட்களாய் வரவேயில்லை. இப்போது மட்டும் ஏன் வந்தது ?

இந்தியாவுக்கு உலக கிண்ணத்தை வென்று கொடுப்பதற்கான அணியை தேர்வு செய்த பிரதம தேர்வாளரான ஸ்ரீகாந்த் இப்போது அந்த பதவியில் இல்லாமையும் சச்சினின் ஓய்வுக்குக்கான சிந்தைக்கு ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. ஸ்ரீகாந்தின் ஓய்வுக்கு பின்னர் செப்டம்பர் 27 ம் திகதி பிரதம தேர்வாளராக நியமிக்கபட்ட சந்தீப் பட்டேல் சச்சினுக்கு ஆதரவு கொடுப்பாரா என்கின்ற ஒரு சந்தேகம் சச்சினுக்கு இருந்திருக்கலாம். அதைவிடவும் மோசமான தன்னுடைய அண்மைய பெறுதிகள் கூட இந்த சிந்தினைக்கு இட்டு சென்றிருக்கும்.

# "ஓய்வை நெருங்கும் சச்சின்"

சச்சின் தன் இறுதி 20 டெஸ்ட் இன்னிங்க்சில் 10 தடவைகள் LBW மற்றும் bowled முறை மூலம் ஆட்டமிழந்துள்ளார். அதைவிடவும் அவரது இந்த இன்னிங்க்சில் எந்தவொரு சதமும் உள்ளடங்காமல் 723 ஓட்டங்களைத்தான் பெற்றிருக்கிறார்.


சச்சினால் நன்கு மதிக்கபட்டவர், சச்சினை நன்கு மதித்து ஆலோசனைகள் பலவற்றை சொல்லிய முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் அண்மையில் முன்வைத்த கருத்தும் இந்த கேள்விகளை வலுவடைய செய்துவிட்டது. சச்சின் தன் கால்களை நகர்த்துகின்ற விதத்தில் இப்போது தோற்றுபோய்விட்டார், பந்துகளுக்கு ஏற்ற விதத்தில் அவர் கால்கள் நகர மறுக்கின்றன என்கின்ற குற்றச்சாட்டுக்களும் அதிகமாய் முன்வைக்கபட்டவையே. இவ்வாறான விமர்சனங்கள் என்பது சச்சினுக்கு ஒன்றும் புதிதல்ல என்றாலும் அத்தனை தடவைகளிலும் தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்த சச்சின் அவர் வாயால் பதில் கொடுத்ததை காட்டிலும் துடுப்புகளாலே அதிகம் பதில் கொடுத்தவர்.

அப்படியே பழகிப்போன சச்சின் இன்று துடுப்பெடுத்து தடுப்பதற்கே நடுக்கம் காட்டுகிறார். ஒரு துடுப்பாட்ட வீரர் தனக்கு வீசப்படும் பந்து விக்கெட்டை தகர்பதற்கு விட்டுவிடுகிறார் என்றால் அவருடைய பாத நகர்வுகள் (foot work) சீராக இல்லை என்பதே அர்த்தமாகிறது. சச்சின் அண்மைய நாட்களில் அதிகம் இவ்வாறுதான் ஆட்டமிழந்திருக்கிறார். இதனாலேதான் எல்லோரும் சச்சினின் ஓய்வு பற்றி உரக்க உச்சரிக்கின்றனர். ராகுல் டிராவிட் -55, அலன் போர்டர் -53, சச்சின் டெண்டுல்கர்-51 எனும் அடிப்படையில் டெஸ்ட் போட்டிகளில் நேராக விக்கெட்டை தாரைவார்த்து ஆட்டமிழந்துள்ளார்கள் .

சச்சின் தன் இறுதி 20 டெஸ்ட் இன்னிங்க்சில் 10 தடவைகள் LBW மற்றும் bowled முறை மூலம் ஆட்டமிழந்துள்ளார். அதைவிடவும் அவரது இந்த இன்னிங்க்சில் எந்தவொரு சதமும் உள்ளடங்காமல் 723 ஓட்டங்களைத்தான் பெற்றிருக்கிறார். இவர் இறுதியாக டெஸ்ட் போட்டியில் சதம் கடந்தது தென் ஆப்ரிக்காவில் ஜனவரி 2011 இல். சச்சின் தன் கிரிக்கெட் வாழ்கையில் தொடர்ந்து மூன்று தடவைகள் விக்கெட்டில் பந்து பட்டு ஆட்டமிழந்த சந்தர்பங்கள் இதுவரை மூன்று முறை நிகழ்ந்திருக்கிறது. ஆனால் அடுத்த முறை மிகப்பெரும் ஓட்ட எண்ணிகையை பெற்றுகொண்டிருக்கிறார். ஆனால் இம்முறைதான் அவ்வாறு மீண்டு வரமுடியாது போயிருக்கிறது.

**காத்திருப்பும் பொறுமையும் தான் சச்சின் சாதனையின் தாரக மந்திரங்கள்**

99 சர்வதேச சதங்களை பெற்ற பின் தன் நூறாவது சதத்துக்காக இவர் 370 நாட்கள்வரை காத்திருந்தார். 23 ஆண்டுகளாக கிரிக்கெட் ஆடியிருக்கும் சச்சின் 22 ஆண்டுகள் உலக கிண்ணத்தை ஏந்துவதற்காக காத்திருந்தார். இவ்வாறான காத்திருப்புக்கள் எல்லாம் சச்சினின் காலத்தையும் நேரத்தையும் வீணடிக்கவில்லையாயினும் சர்வதேச வீரர்கள் பலருக்கு நல்ல படிப்பினைகளை புகட்டியிருக்கின்றன.



ஆனாலும் தற்போது சச்சின் ஓய்வு பெறவேண்டியது காலத்தால் கட்டாயமாக்கபட்டுவிட்டது. எதிர்வரும் இங்கிலாந்து அணியுடனான தொடரோடு சச்சின் ஓய்வை அறிவித்தாலும் அது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால், இதுவரை ஓய்வு பற்றிய எண்ணமில்லை என்று விடாபிடியாக இருந்தவர் கருத்துக்களில் இப்போது மாற்றம் வந்திருக்கிறது. ஓய்வு பற்றி சிந்திக்க வேண்டிய தருணம் வந்திருக்கிறது என்கின்ற அண்மைய கருத்துக்கள் இவர் ஓய்வை வெகு விரைவில் அறிவிப்பார் என்றே எண்ணத்தோன்றுகிறது.

இந்தியாவிற்கு வெளியிலோ, அல்லது இந்திய துணை கண்டத்திலோ சச்சினின் ஓய்வு இருக்கபோவதில்லை. அது கண்டிப்பாக இந்திய மண்ணில்தான் அமையபோகிறது. ஆகமொத்தத்தில் இங்கிலாந்துடனான தொடரில் அந்த அறிவித்தலை எதிர்பார்த்திடலாம் போலிருக்கிறது. ஒரு காலகட்டத்தில்தான் சச்சின் விக்கெட் வீழ்த்தப்பட்டால் இந்தியா தோற்றுபோகின்ற வரலாறு இருந்திருக்கிறது,

1996 உலக கிண்ண அரையிறுதி ஆட்டத்தில் அது நன்கு வெளிப்பட்டிருந்தது. இப்போதெல்லாம் அந்த நிலைமைகள் இந்திய கிரிக்கெட்டில் இல்லை என்ற திருப்பதியோடு இவரும் விடைகொடுக்கலாம்

இலங்கையர்களால் உச்சத்தில் வைத்து நேசிக்கபட்ட சனத் இவ்வாறு மனவேதனையோடு தான் தன் ஓய்வை அறிவித்திருந்தார். தானாக ஓய்வு பெற நினைக்காத சனத்தை இங்கிலாந்து தொடருக்கு தெரிவு செய்வது போன்று தேர்வு செய்து இத்தோடு ஓய்வு பெற்றுவிடுங்கள் என்கின்ற மறைமுக அழுத்தங்கள் பிரயோகிகப்பட்ட நிலைதான் சச்சினுக்கும் நேரப்போகிறது. இதையெல்லாம் கவனத்திலெடுத்து இந்த சாதனையாளன் தன் ஓய்வை வெகு விரைவில் அறிவிப்பதென்பது இவருக்கும் இவர் சார்ந்த ரசிகர்களுக்கும் நல்ல விடயமாய் பார்க்கப்படுகிறது. சாதனையோடும் சந்தோசத்தோடும் சர்வதேச கிரிக்கெட்டுக்கு விடைகொடுக்கும் சந்தர்பம் இனிமேலும் அமையுமா என்கின்ற சந்தேகம் எனக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் இருக்கிறது.

# நடுநிலைமைக்கு கிடைத்த கௌரவம்

**- சீ.கே.மயூரன்**





சர்வதேச கிரிக்கெட்டுலகில் பல நடுவர்கள் உருவாகினாலும் ஒரு சிலர் மட்டுமே ரசிகர்கள் மனதில் தனியிடம் பிடிப்பர். அப்படிப்பட்ட நடுவர்களிலொருவர் சைமன்டாபெல் (Simon Taufel). ஆடுகளத்தில் துணிகரமாக வழங்கும் சரியான தீர்ப்புகள், ஆடுகளத்தில் கோபப்படாமல் சிரித்த முகத்துடன் நடு நிலைமை வகிப்பது என்பன இவருக்கேயுரிய தனிச் சிறப்பு. இவையே கிரிக்கெட் ரசிகர்கள் இவர் மீது அதிக மதிப்பைக் கொண்டுள்ளமைக்கான காரணமெனலாம். கிரிக்கெட் ரசிகர்கள் மட்டுமன்றி அனைத்து நாட்டு வீரர்களிடத்திலும் அதிக மரியாதையைப் பெற்ற நடுவர் டாபெல் என்றும் கூறலாம்.

உலகின் தலைச்சிறந்த கிரிக்கெட் நடுவர்களில் ஒருவரான அவுஸ்ரேலியாவின் சைமன் டாபெல் கடந்த 7ஆம் திகதி நிறைவடைந்த ட்வெண்டி 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டுலகில் நடுவர் பணிக்கு விடை கொடுத்தார்.

41 வயதான டாபெல் தனது 27ஆவது வயதில் 1999 ஆம் ஆண்டு சிட்னியில் அவுஸ்ரேலிய - இலங்கை அணிகளுக்கிடையேயான ஒருநாள் சர்வதேச தொடரில் நடுவராக அறிமுகமானார். 2000ஆம் ஆண்டு பாக்சிங் டே டெஸ்ட் போட்டியில்(அவுஸ்ரேலிய - மேற்கிந்தியத் தீவுகள்) மெல்பேர்னில் தனது முதல் டெஸ்ட் நடுவர் பொறுப்பை ஏற்றார். 2007 ஆம் ஆண்டு கென்ய, நியூசிலாந்து அணிகளுக்கிடையே தென்னாபிரிக்காவின் டேர்பனில் நடைபெற்ற ட்வெண்டி 20 போட்டியே இவர் நடுவராக செயற்பட் முதல் ட்வெண்டி 20 போட்டி.

13 ஆண்டுகால கிரிக்கெட் வாழ்வில் 74 டெஸ்ட், 174 ஒரு நாள் சர்வதேச போட்டிகள், 34 ட்வெண்டி 20 போட்டிகளில் நடுவராக செயற்பட்டிருக்கிறார். 2004 முதல் 2008 வரை தொடர்ந்து 5 முறை சர்வதேச கிரிக்கெட் பேரவையின் சிறந்த நடுவருக்கான விருதை பெற்றிருக்கிறார். இது அவரது நடு நிலைமைக்குக் கிடைத்த உயரிய கௌரவம்.





2011ஆம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ண இறுதிப் போட்டியிலும் 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நடந்த ட்வெண்டி 20 உலகக்கிண்ண தொடர்களிலும் 2004 ஆம் ஆண்டு ஐ.சி.சி யின் சாம்பியன் கிண்ண இறுதிப் போட்டியிலும் நடுவராக செயற்பட்டுள்ளார்.

சிட்னியில் சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரராகத் திகழ்ந்த டாபெல் ஒரு சிறந்த வேகப்பந்து வீச்சாளராக மிளிர்ந்தார். ஆனால் இவரால் தொடர்ந்து விளையாட முடியாமல் போனது. இவருக்கு ஏற்பட்ட முதுகு வலி இவரது கிரிக்கெட் கனவை தகர்த்தது. கிரிக்கெட் விளையாட்டை தொடர முடியாமல் இளம் வயதிலேயே நடுவராக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மைக்கல் ஸ்லேட்டர், அடம் கில்கிறிஸ்ட் உட்பட்ட முன்னணி வீரர்களுடன் அவுஸ்ரேலிய பிராந்திய அணிகளில் விளையாடியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் சிறந்த நடுவர் குழுவில் (எலைட் பேனல்) இடம் பெற்றிருந்த சைமன் டாபெல் நடுவர் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றாலும் ஐ.சி.சி புதிதாக உருவாக்கியுள்ள ஐ.சி.சி நடுவர் பயிற்சிக்குழுவில் நடுவர் செயற்திறன் மற்றும் பயிற்சி முகாமையாளராக செயலாற்றவுள்ளார்.

தன் கிரிக்கெட் வாழ்கையில் சிறந்த முடிவுகளை வழங்கிய இவர் தனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரியான தருணத்தில் சரியான முடிவை எடுத்துள்ளார். இவரைப் போன்ற சிறந்த நடுவர்களை இனி ஆடுகளங்களில் நமக்குக் காணக் கிடைப்பது அரிதாகவே இருக்கும்.

வாழ்த்துக்கூறி வழியனுப்பி வைப்போம்.

# தங்கம் குவிக்கும் 'ஆசிரிய மெய்வல்லுநர்' த.பாகீஸ்வரன்



2009ஆம் ஆண்டு ஆசிரியர்களுக்கான தேசிய மெய்வல்லுநர் போட்டி திருகோணமலை மக்கேசர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போது அளவெட்டி அருணோதயக் கல்லூரி ஆசிரியர் த.பாகீஸ்வரன் குண்டு போடுதல், தட்டு ஏறிதல், ஈட்டி ஏறிதல் ஆகிய விளையாட்டுக்களில் பங்குபற்றி மூன்று போட்டிகளிலும் தங்கப் பதக்கத்தினை பெற்றுக்கொண்டார். 2010ஆம் ஆண்டு யாழ்ப் பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளின் போது இவர் மீண்டும் இம்மூன்று விளையாட்டுக்களிலும் தங்கப்பதக்கத்தினை பெற்றுக்கொண்டார். கடந்த 2011ஆம் ஆண்டு நுவரேலியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆசிரியர் களுக்கான போட்டிகளில் குண்டு போடுதல், தட்டு ஏறிதல் ஆகியவற்றில் தங்கப் பதக்கங்களையும் ஈட்டி ஏறிதலில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார். சில காரணங்களினால் இவ் வருடத்திற்கான போட்டிகள் இன்னும் நடத்தப்படவில்லை. அவற் றை அடுத்தவருட முற்பகுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய் யப்படுகின்றன. அந்தப் போட்டிகளிலும் இவர் தங்கம் குவிப்பார் என எதிர்பார்க்கலாம்.

## இலங்கைத் தேசிய அணியில் ஹென்றிஸ் வீரர் ஞானேஸ்வரன்

ஜப்பான் உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் அழைப்பின் பேரில் ஜப் பான் சென்றுள்ள 14 வயதுப்பிரிவு இலங்கை கால்பந்தாட்ட அணியில் யாழ். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர் ஏ.என்.ஞானேஸ்வரன் இடம்பெற்றுள்ளார். அண்மையில் தேசிய மட்டத்தில் நடைபெற்ற 15 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக் கிடையிலான உதைப்பந்தாட்டத்தில் ஹென்றிஸ் அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இதில் சிறப்பான ஆட்டத்தினை ஞானேஸ்வரன் வெளிப்படுத்தியதால் தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டார். இந்த தேசிய அணியில் வடக்கு, கிழக்கு வீரர்கள் உட்பட 22 பேர் கலந்து கொண்டுள்ளனர். ஜப்பானில், இலங் கையுடன் ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் போட்டிகளில் பங்குபற்றுகின்றன. இதேவேளை ஜப்பான் சென்றுள்ள உதைப்பந் தாட்ட அணிக்கு உதவிப்பயிற்றுவிப்பாளராக யாழ்.மாவட்ட பாட-சாலைகள் உதைப்பந்தாட்டச் சங்கத்தின் இணைப்பாளர் மரியதாஸ் போர்ட்டி பனிஸ்ரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



## முரளி நல்லிணக்க வெற்றிக் கிண்ணத்தால் சிங்கப்பூர் சென்ற ஐந்து வடக்கு வீரர்கள்

2012ஆம் ஆண்டுக்கான முரளி நல்லிணக்க வெற்றிக் கிண்ண கிரிக்கட் தொடரில் பங்குபற்றி சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய ஐந்து வடபகுதி வீரர்கள் சிங்கப்பூருக்கு சென்ற 14 பேர் கொண்ட இலங்கைத் தெரிவு அணியில் இடம்பெற்றனர். இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ரியூடர், யாழ்.மத்திய கல்லூரி மாணவன் எட்வெட் எடின், கிளி.மத்திய கல்லூரி மாணவன் கணேஸ் லக்சிதரன், முள் ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவன் பி.சுதனன், வவுனியா தமிழ் ம.மாகா வித்தியாலய மாணவன் ஹரிப்பிரணவன் ஆகிய ஐவரும் இடம்பெற்றனர்.

## தேசிய மட்ட பளுதூக்கலில் சாந்தகோபி சாதனை




அகில இலங்கைப் பாடசாலை களுக்கு இடையில் அண்மை யில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற தேசிய மட்ட பளுதூக் குப் போட்டியின் 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி வீரர் சாந்த கோபி முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண் டார். இவர் 85 கிலோ எடைப்பிரிவில் 120 கிலோ எடையைத் தூக்கியே முதலாமிடத்தைப் பெற்றார்.




# கலக்கியவர்கள் இல்லாமல் களமிறங்கும் இலங்கையணி

-புறாணோ



இலங்கை அணி 'ட்வென்டி 20 - 2012' உலகக் கிண்ணத்தை இழந்த பின் பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் உளவியல் அழுத்தங்களுடன் நியூசிலாந்து அணியை, இலங்கை மண்ணிலேயே சந்திக்கின்றது. ஒரு ட்வென்டி 20 போட்டி, ஐந்து ஒருநாள் போட்டிகள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இவ்விரு அணிகளுக்கும் விளையாடவுள்ளன. இத் தொடர் இவ்விரு அணிகளுக்கும் முக்கியமான தொடராக அமையவுள்ளது.

ட்வென்டி 20 போட்டியைப் பொறுத்தவரை இலங்கை மிக இளமையான அணியுடன் களமிறங்கியுள்ளது. இம்முறை இலங்கை அணி லகிரு திருமன்ன, ஜீவன் மெண்டிஸ், தினேஷ் சந்திமல் போன்ற இளைய வீரர்களை கருத்திற் கொண்டு களமிறங்கியிருப்பது ஆரோக்கியமான விடயமாகும். இப்பரிசோதனை முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் இலங்கையின் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை. நியூசிலாந்து அணியும் தாங்கள் உலகக்கிண்ண போட்டியில் பெற்ற தோல்விகளை சரிசெய்யும் வகையில் இத் தொடரில் கடுமையாக முயற்சிக்கவுள்ளது. ஜேகப் ஓரம், ஜேம்ஸ் ஃபிராங்கிளின், நேதன் மக்கலம் போன்ற வீரர்கள் தங்கள் திறமையை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகள் இதுவரை 10 ட்வென்டி 20 போட்டிகளில் விளையாடியுள்ளன. இதில் 4 போட்டிகளில் இலங்கையும், 5 போட்டிகளில் நியூசிலாந்தும் வெற்றிபெற்றுள்ளன. இவ்விரு அணியளுக்கிடையில் இடம்பெற்ற இறுதி ட்வென்டி-20 போட்டியில் இலங்கை அணி சூப்பர் ஓவர் முறையில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு அணி வீரர்களில் துடுப்பாட்டத்தில் இலங்கையணியின் மஹேல ஜயவர்த்தன அதிகபட்சமாக 273 ஓட்டங்களையும், நியூசிலாந்தின் ரொஸ் டெய்லர் 235 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். பந்து வீச்சில் இலங்கையணியின் அஜந்த மென்டிஸ் 11 விக்கட்டுக்களையும், லசித் மாலிங்க 10 விக்கட்டுக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

ஒருநாள் போட்டிகளைப் பொறுத்தவரை இவ்விரு அணிகளும் 74 போட்டிகளில் விளையாடியுள்ளன. அதில், இலங்கை 34 போட்டிகளிலும், நியூசிலாந்து 35 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளதுடன், ஒரு போட்டி சமநிலையிலும், 3 போட்டிகள் வெற்றி தோல்வியின்றியும் நிறைவடைந்துள்ளன. ஆனால் அண்மைக்கால போட்டிகளை பொறுத்தவரை இலங்கை அணி சிறப்பாக செயற்பட்டுள்ளது.

இதுவரை நடந்த ஒருநாள் போட்டிகளில் இலங்கையணியின் சனத் ஜயசூரிய அதிகபட்சமாக 1519 ஓட்டங்களையும், மஹேல ஜயவர்த்தன 925 ஓட்டங்களையும், குமார் சங்கக்கார 917 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். பந்துவீச்சில் முத்தையா முரளீதரன் 74 விக்கட்டுக்களையும், சமிந்த வாஸ் 49 விக்கட்டுக்களையும் சனத் ஜயசூரிய 38 விக்கட்டுக்களையும் கைப்பற்றியுள்ளனர். சகல துறைகளிலும் இலங்கையணியின் ஆதிக்கம் இருந்தாலும் இதுவரை கலக்கிய முன்னணி வீரர்கள் பலர் தற்பொழுது அணியில் இல்லை என்பதனையும் கவனிக்க வேண்டும். இலங்கையைப் பொறுத்த வரை முதன்முறையாக ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ள அகில தனஞ்சய, தன்னை இலங்கையின் சிறந்த வேக பந்துவீச்சாளராக நிலைநிறுத்த காத்திருக்கும் சமிந்த எரங்க ஆகியோருக்கு சிறந்த

அடித்தளமிடவிருக்கும் தொடராக இது அமையவுள்ளது.

டெஸ்ட் போட்டிகளைப் பொறுத்தவரை இவ்விரு அணிகளுக்கும் இடையே நடைபெற்ற 26 போட்டிகளில் 9 இல் நியூசிலாந்தும், 7 போட்டிகளில் இலங்கையும் வெற்றிபெற்றுள்ளன. 10 போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்துள்ளன. டெஸ்ட் போட்டிகளில் அதிகபட்சமாக இலங்கையணியின் மஹேல ஜயவர்த்தன 928 ஓட்டங்களையும், குமார் சங்கக்கார 651 , நியூசிலாந்தின் டானியல் விட்டோரி 482 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். பந்துவீச்சில் இலங்கையணியின் முத்தையா முரளீதரன், 82 விக்கட்டுக்களையும், டானியல் விட்டோரி 51 விக்கட்டுக்களையும், சமிந்த வாஸ் 42 விக்கட்டுக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் இலங்கை வீரர்கள் முன்னிலையில் இருந்தாலும் 'ஒட்டு மொத்த அணியின் பெறுபேறுகளில்' நியூசிலாந்து சிறப்பாகச் செயற்பட்டுள்ளது. எனவே மிக விறுவிறுப்பான ஒரு தொடரை கிரிக்கட் ரசிகர்கள் எதிர்பாத்திருக்கும் அதேவேளை தரவரிசைகளைப் பொறுத்தவரையும் இத்தொடர் முக்கியமானதாக அமையவுள்ளது.


ட்வெண்டி 20 தரவரிசையைப் பொறுத்த வரை இலங்கை முதலாம் இடத்தையும் நியூசிலாந்து 8வது இடத்தையும் பெற்றுள்ளன. இப்போட்டியில் இலங்கையணி தோற்றால் அதன் முதலிடத்துக்கு மே. தீவுகளால்(2ம் இடம்) பெரும் சவால் ஏற்படலாம்.

ஒருநாள் போட்டிகளைப் பொறுத்தவரை இலங்கை, நியூசிலாந்து அணிகள் முறையே 5ம், 8ம் இடங்களைப் பெற்றுள்ளன. நியூசிலாந்தைப் பொறுத்தவரை இத் தொடரின் வெற்றி மிக முக்கியமானது. காரணம், வெறும் 74 புள்ளிகளை மட்டும் பெற்றுள்ள இவ்வணிக்கு பங்கிளாதேஷ் (71 புள்ளிகள்) மற்றும் மே.தீவுகள் அணிகள் பெறும் ஒவ்வொரு வெற்றியும் ஆபத்தாக அமையும்.

டெஸ்ட் தரவரிசையைப் பொறுத்தவரை இலங்கை 6ம் இடத்திலும் நியூசிலாந்து 8வது இடத்தையும் பெற்றுள்ளன. இந்த டெஸ்ட் தொடர் இலங்கை அணி இவ்வருடத்தில் விளையாடப்போகும் இறுதி இரு டெஸ்ட் போட்டிகளாகும். எனவே இவ்விறுதி போட்டிகளையும் வெற்றி பெற அவ்வணி கடுமையாகப்போராடும்.

அணி விபரத்தை பொறுத்த வரை நியூசிலாந்து அணி தங்களது முதற்தர சுழற்பந்து வீச்சாளர் டானியல் விட்டோரி இல்லாமல் களமிறங்கவுள்ள அதேவேளை மார்டின் குப்டில் டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே பங்குபெறவுள்ளார். ட்வெண்டி 20 மற்றும் முதல் 3 ஒருநாள் போட்டிகளுக்காக அறிவிக்கப்பட்ட இலங்கை அணியில், ட்வெண்டி 20 போட்டியின் தலைவராக அஞ்சலோ மத்தியூஸ்ும், ஒருநாள் போட்டிகளுக்கு மஹேல ஜயவர்த்தனவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கையின் அஜந்த மெண்டிஸ்ும் உபாதை காரணமாக தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இத்தொடர் குறித்து கருத்து தெரிவித்த நியூசிலாந்தின் சகலதுறை வீரர் ஜேகப் ஓரம் ' இலங்கை சொந்த மண்ணில் சிறப்பாக செயற்படும் அணி எனவும் தங்கள் அணி மிகச்சிறந்த திறைமையான அணி எனவும் சரியான நேரத்தில் திறமைகள் வெளிப்படும் பட்சத்தில் இலங்கையை வீழ்த்த முடியும்' என்றார். எனவே வேகமும் விறுவிறுப்பும் நிறைந்த ஒரு தொடரை அனைத்து கிரிக்கட் ரசிகர்களும் எதிர்பார்த்துள்ளனர். ●

# சென்.ஜோன்ஸ் கிண்ணம், கொக்குவில் இந்து வசம்



சென்.ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ்.தனபாலன் ஞாபகார்த்தமாக இலங்கை வங்கி மற்றும் 'சீமா' ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்படும் 19 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான அணிக்கு 6 வீரர்களை கொண்ட கிரிக்கட் சுற்றுப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றுக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணியை கொக்குவில் இந்துக்கல்லூரி அணி எதிர்கொண்டது. ஐந்து ஓவர்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்து அணியினர் இரண்டு விக்கட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் ஆதித்தன் 20 ஓட்டங்களை அணிக்காக பெற்றுக் கொடுத்தார். பதிலளித்தாடிய யாழ். இந்து அணியினர் ஏழு பந்துகள் மீதமிருக்க ஐந்து இலக்குகளையும் இழந்து 39 ஓட்டங்களை மட்டும் பெற்று 21 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்த போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆதித்தனும், சிறந்த பந்து வீச்சாளராக அதே அணியைச் சேர்ந்த பவிதரனும் தெரிவாகினர். சிறந்த களத் தடுப்பாளராக யாழ்.இந்துவைச் சேர்ந்த சஜீகன் தெரிவானார். இந்த வெற்றியுடன் தொடர்ந்தும் மூன்றாவது வருடமாக கொக்குவில் இந்துக் கல்லூரி சம்பியன் கிண்ணத்தை வென்று ஹற்றிக் சாதனை படைத்துள்ளது.

இந்தத் தொடரில் யாழ்.இந்துக் கல்லூரி, வல்வை.சிதம்பரக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி (சிவப்பு மற்றும் கறுப்பு அணிகள்), சென்.பற்றிக்ஸ் கல்லூரி, கைதடி நவீல்ட் பாடசாலை, யாழ்.மத்திய கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய 12 பாடசாலைகளின் அணிகள் கலந்து கொண்டன.

ஆசியாவில் பிரபல்யம் பெறாத டெனிஸ் விளையாட்டை உறுதிபெறச் செய்யும் வகையில் 1973 ஆம் ஆண்டு 'ஹொங்ஹொங் டெனிஸ் தொடர்' ஆரம்பிக்கப்பட்ட போதும், 2002 ஆம் ஆண்டு வரையிலேயே தொடர்ச்சியாக அதனை நடாத்த முடிந்தது. அதன்பின்னர் இந்தியா உள்ளிட்ட பல ஆசிய நாடுகள் தமது நாடுகளில் டெனிஸ் தொடரை நடாத்தி வந்திருக்கின்றபோதும் அது உலக தரம் வாய்ந்ததாக அமையவில்லை. இக்குறையை நிவர்த்திசெய்ய எண்ணிய சீன டெனிஸ் கழகம் ஆசியாவின் மிகப்பெரும் தொடர் ஒன்றை முன்னின்று நடத்துவதற்கு எத்தணித்தது. அதன் விளைவாக ஷங்காய் நகரில் 2008 ஆம் ஆண்டு நவீன வசதிகளை கொண்ட டெனிஸ் அரங்கை அமைத்ததோடு உலகத்தரத்தில் போட்டிகளை நடத்துவதற்கு சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்டது.




# முரேயின் 'ஹட்ரிக்' கனவைத் தகர்த்த ஜொக்கோவிச்

- ராம்

ஷங்காய் நகரத்தில் நடைபெறுவதாலும் தனியே ஆடவர் ஒற்றையர் மற்றும் இரட்டையர் ஆட்டங்களை கொண்டதால் இத்தொடர் 'ஷங்காய் மாஸ்டர்ஸ் தொடர்' என அழைக்கப்பட்டு வருகின்றது. உலகின் முன்னணி டெனிஸ் நட்சத்திரங்கள் பங்கேற்கும் இத்தொடர் 2009 முதல் தொடர்ச்சியாக நடைபெற்றுவருவதோடு இறுதி கிராண்ஸ்லாம் தொடரான அமெரிக்க ஓபன் தொடர் நிறைவடைந்ததன் பின்னர் ஆரம்பமாவது வழமையாகும்.

**முரேயின் ஹட்ரிக் வெற்றிக் கனவை தகர்த்தார் ஜொக்கோவிச்**

இவ்வருட தொடரின், அரையிறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான சுவிற்சலாந்தின் ரொஜர் பெடரரை வெற்றி கொண்ட மூன்றாம் நிலை வீரரும், இம்முறை பிரித்தானி டெனிஸ் வரலாற்றை மாற்றியமைத்தவருமான அன்டி முரே இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றிருந்தார். மறுபுறத்தில் உலகின் இரண்டாம் நிலை வீரரான சேர்பியாவின் நொவக் ஜொக்கொவிச் இறுதிப்போட்டியில் சாதிக்க காத்திருந்தார். விறுவிறுப்பாக ஆரம்பமான இறுதிப்போட்டியின் முதலாவது செட்டை முரே 5-7 என கைப்பற்றி நொவக் ஜொக்கோவிச்க்கு அதிர்ச்சியளித்த போதும் இரண்டாவது செட்டில் எழுச்சி கண்ட நொவக் ஜொக்கோவிச் கடும் போராட்டத்திற்கு பின்னர் 7-6 என பதிலடி வழங்கினார்.

தீர்க்கமான மூன்றாவது சுற்றில் ஆரம்பத்தில் ஆதிக்கம் செலுத்திய முரேயை கடுமையாக போராடி வந்த ஜொக்கோவிச் 6-3 என்ற கணக்கில் கைப்பற்றி முதற்தடவையாக ஷங்காய் மாஸ்டர்ஸ் பட்டத்தையும் தனதாக்கியதோடு,



முரேயின் ஹட்ரிக்கனவையும் தகர்த்தார். முன்னதாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் அண்டி முரே கிண்ணத்தை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை அவுஸ்ரேலிய ஓபன் தொடரில் கிண்ணத்தை கைப்பற்றிய நொவக் ஜொக்கோவிச் இவ்வாண்டு வெற்றி கொள்ளும் மற்றுமாரு முக்கியமான கிண்ணம் ஷங்காய் மாஸ்டர்ஸ் ஆகும்.

**இரட்டையர் பிரிவில் மீண்டும் சாதித்தார் பயஸ்**

இந்தியவின் புகழ் பூத்த ஆடவர் இரட்டையர் டெனிஸ் ஜோடியான லியன்டர் பயஸ் மற்றும் மகேஷ் பூபதி ஆகியோர் பிரிந்ததன் பின்னர் முதற்தடவையான வெவ்வேறு ஜோடியாக களம் கண்ட இறுதிப்போட்டியாக அமைந்ததால் அதிக எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்றது ஷங்காய் இரட்டையர் இறுதிப்போட்டி.

லியன்டர் பயஸ் செக் குடியரசின் ஸ்டெபானெக் ஜோடி, மகேஷ் பூபதி ரோஹன் போபண்ணா ஜோடியை எதிர்கொண்டது. ஆரம்பம் முதலே அதிரடியாக செயற்பட ஆரம்பித்த பயஸ் - ஸ்டெபானெக் ஜோடி முதலாவது செட்டை 6- 7 என கைப்பற்றியதோடு, இரண்டாவது செட்டை 6- 3 என சுலபமாக கைப்பற்றியது. மூன்றாவது சுற்றில் போராடிய பூபதி போபண்ணா ஜோடிக்கு தொடர்ந்தும் நெருக்கடியளித்து 10- 5 என்ற செட் கணக்கில் வீழ்த்தி சாம்பியனானது லியன்டர் பயஸ் ஜோடி. அதேவேளை ஷாங்காய் மாஸ்டர்ஸ் தொடர் வரலாற்றில் 2010 ஆம் ஆண்டு ஒஸ்ரியாவின் யூரிகன் மெல்ஸர் இணைந்து கிண்ணத்தை கைப்பற்றியிருந்ததோடு இவ்வாண்டு மற்றுமொரு தடவை சாதித்திருக்கின்றார் இந்தியாவின் லியன்டர் பயஸ். ●

உங்கள் எழுத்துக்களை அச்சு ஊடகங்கள்
அங்கீகரிக்கவில்லையா?
அச்சு ஊடகங்களில் வெளிவந்த உங்கள்
ஆக்கங்கள் நூலுருப் பெற வேண்டுமா?
பாதுகாக்கப்படவேண்டிய படைப்புக்களை
ஆவணப்படுத்த வேண்டுமா?

**சாந்தினி வெளியீட்டகம்,**
வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு, சுன்னாகம்.
மின்னஞ்சல் : vsheron@gmail.com



# வாசகர் கருத்து



எஸ்.அகிலாஜினி, வெள்ளவத்தை

இன்றைய காலத்தில் வாசிப்பு பழக்கங்கள் குறைந்து வரும் காலத்தில் கூட மாணவர்களுடைய வாசிப்பை தூண்டுகின்ற அளவுக்கு வெளிவந்து கொண்டு இருக்கும் "கேடயம் " மிகவும் சிறப்புடன் வெளிவருவதற்கு எமது வாழ்த்துக்கள் . புது தகவல்கள் மட்டும் இன்றி ஆரம்ப கால சில குறிப்புகள், அவற்றுக்கான வரலாறுகளையும் எதிர் பார்க்கிறோம்.

கு.சாண்டில்யன், யாழ்ப்பாணம்

வித்தியாசமான ஒரு புதிய முயற்சி. ஜனரஞ்சக சஞ்சிகைகள் என்ற வட்டத்தை விடுத்து 'தனியே விளையாட்டுக்கு மட்டும்' சஞ்சிகை என ஆரம்பித்திருப்பது பாராட்டப்படவேண்டிய விடயம். பக்க வடிவமைப்பு, செய்திகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் அசத்தலாக இருக்கின்றது. இனி வரும் காலத்தில் இலவசமாக ஒரு விளையாட்டுப் பிரபலத்தினுடைய 'போஸ்டரை' நடுப்பக்கத்தில் வையுங்கள். இது உங்கள் சஞ்சிகைக்கான விற்பனையைக் கூட்டும். வாழ்த்துக்கள்.

இ.அருணகிரி, இணுவில்

உலகக் கிண்ண ட்வென்டி 20 தொடர்பான கட்டுரையில் நீங்கள். சேர்த்திருந்த படத்தில் மே. தீவுகள் அணித்தலைவர் சமியும், இலங்கை அணித் தலைவர் மஹேலவும் நிற்கிறார்கள். இறுதிப்போட்டியில் இடம்பெற்ற இரு அணிகளும் இவையே! என்ன ஒரு தீர்க்க தரிசனத்துடன் அவர்கள் இருவரின் படங்களையும் பிரசுரித்தீர்கள் என நினைக்கும் போது ஆச்சரியமாக இருக்கின்றது. தொடர்ந்தும் பிரமிப்பூட்டும் விடயங்களை சேர்த்துக் கொள்ளுங்கள். கேடயம் மேலும் பல சிறப்புக்களைப் பெற வாழ்த்துகிறேன்.

அ.மேனகா, கொழும்பு 12

கிளித்தட்டு, கிட்டிப்புள், சடுகுடு, கிறீஷ் கம்பம் ஏறுதல் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்கள் பற்றிய தகவல்களைச் சேர்த்துக்கொள்ளுங்கள். இன்றைய சிறுவர்கள் பலருக்கு இவை பற்றி எதுவும் தெரியாது. பாடசாலைகளில் கூட சொல்லிக் கொடுப்பதில்லை. மாணவர்கள் ஆவணமாக வைத்து பாவிக்க கூடிய வகையிலும் தரவுகள் உள்ளடங்கிய விளையாட்டுச் செய்திகளைப் பிரசுரியுங்கள். இரண்டாவது இதழ் காண ஆவல்.!

ஆர்.கிருஷிகன், நெல்லியடி

எங்கள் உறவினர் ஒருவர் தந்தே இச்சஞ்சிகையை வாசித்தேன். எங்கள் பாடசாலையில் இதனைப் பெறக்கூடியதான ஏற்பாடுகளைச் விரைவாக செய்யுங்கள். பரிசுப்போட்டியில் பங்குபெறுவதற்கான சந்தர்ப்பத்தை இம்முறை நழுவவிட்டுவிட்டேன். 2ஆவது இதழ் வெளிவந்ததும் விளம்பரப் படுத்துங்கள். நன்றி.

எம்.தயாளன், கொக்குவில்

இந்திய அணியின் இளம் வீரர் சந்த் பற்றிய கட்டுரை நல்லதொரு அறிமுகமாக இருந்தது. அவர் சம்பியன் லீக் போட்டிகளில் சிறப்பாக பிரகாசித்திருந்தார். வீரர் அறிமுகத்துக்கு நன்றி. உள்ளூர் விளையாட்டு வீரர்கள் பற்றிய அறிமுகத்தையும் இனி வரும் இதழ்களில் சேர்த்துக்கொள்ளுங்கள்.

கேடயம் பற்றிய உங்கள் விமர்சனங்களை எங்களுக்கு எழுதியனுப்புங்கள்.

கேடயம்
வட்டுவினி வீதி.
இணுவில் மேற்கு.
சுன்னாகம்.

11ஆம் பக்கத் தொடர்ச்சி...



எமக்கான போதிய வளங்கள் இல்லை, போட்டிகளிற்கான சந்தர்ப்பங்கள் இல்லை என்று கதைத்து •களைத்துப் போனவர்கள் மத்தியிலே மின்னும் நட்சத்திரமாக மானிப்பாய் இந்து மிளிர்கின்றது. இன்று மானிப்பாய் இந்து தேசியப் பாட-சாலையாக உயர்வதற்கு இத் தேசிய மட்ட உதைபந்தாட்ட வெற்றிகள் காரணம் என்றால் மிகையாகாது. இவை எல்லாவற்றிற்கும் காரணமாக துடிப்போடு செயற்பட்டுக் கொண்டிருக்கும் பயிற்றுனர், பொறுப்பாசிரியர், எல்லாவற்றிற்கும் மேலாக கால்லூரியின் அதிபர் கூட போற்றப் படவேண்டியவர்கள். இவற்றினயெல்லாம் விட கல்லூரியின் உணர்வோடும், விளையாட்டு உணர்வோடும் களமாடி வெற்றிகளைக் குவிக்கும் வீரர்களும் பாராட்டப்பட தக்கவர்கள்.

தேசிய மட்ட வெற்றிகளை பெற்றாலும் இவர்களது சாதனைகள் சர்வதேச மட்டம் வரை வளர வேண்டும் வாய்ப்புக்கள் நிறையவே இருக்கின்றன. எனவே கிடைக்கும் சந்தர்ப்பங்களை இனியும் சிறப்பாக பயன்படுத்தி மேலேறி வர "வெற்றிக் கேடயம்" மாதாந்த சஞ்சிகை சார்பாகவும் வாழ்த்துக்கள்.

## கேடயம் மாத இதழ் சந்தா மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முழுப்பெயர் : ..............................................................
2. பால் : ............................ 3. பிறந்த திகதி : ............................
4. அடையாள அட்டை இல : ..............................................................
5. முகவரி : ..............................................................
6. தொலைபேசி எண் : ..............................................................
7. மின்னஞ்சல் முகவரி : ..............................................................
8. மாணவராயின் :

பாடசாலையின் பெயர் : ..............................................................

கல்வி கற்கும் தரமும் பிரிவும் : ..............................................................

திகதி : ......................... கையொப்பம் : .........................................

வங்கியில் வைப்புச் செய்து பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் நீங்களாக தயாரித்த விண்ணப்பப்படிவத்தை இணைத்து எமது முகவரிக்கு அனுப்புவதன் ஊடாக, அல்லது யாழ். பிரதான தபாலகத்தில் மாற்றகக்கூடியதாக மேற்படி பெயருக்கு காசுக்கட்டளை அனுப்புவதன் ஊடாக சந்தாதாரர்களாக இணையலாம். மாதந்தோறும் 'கேடயம்' சஞ்சிகை உங்கள் வீடு தேடி வரும்.

கேடயம் சஞ்சிகை,
வட்டுவினி ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
சுன்னாகம்.

**வங்கிக் கணக்கு விபரம்**

K.Varothayan
Vadduvini Lane,
Inuvil west, Chunnakam.

Commercial Bank
Saving A.C No : 8100056418
Branch : Wellawatta.

**சந்தா தொடர்பான விபரங்கள் - இலங்கையின் எப்பாகத்திற்கும்**

**மூன்று மாதங்களுக்கு : 200ரூபாய்**
**ஆறு மாதங்களுக்கு : 350ரூபாய்**

(தபால் செலவு உட்பட)

லண்டன், அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு 'கேடயம்' சஞ்சிகையை சந்தைப்படுத்த கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். (ஏற்கனவே வேறு சஞ்சிகைகளை சந்தைப்படுத்திக் கொண்டிருப்பவர்கள் விரும்பத்தக்கது)

**2012 - முரளி நல்லிணக்க கிரிக்கட் போட்டிகளில் கலந்து கொண்ட யாழ் மாவட்ட தெரிவு அணிக்கு தலைமை தாங்கியவர் எட்வேட்எடின். இவர் யாழ்.மத்திய கல்லூரியின் மாணவனாவார். அண்மையில் சிங்கப்பூரில் இடம்பெற்ற சினேகபூர்வ கிரிக்கட் போட்டிகளில் கலந்து கொண்ட இலங்கை தெரிவு அணியிலும் இடம் பெற்றிருந்தார். யாழ்.மாவட்டத்தின் முன்னணி கிரிக்கட் வீரரான இவரை கேடயம் இதழுக்காகச் சந்தித்தோம்.**

# தேசிய அணியில் விளையாட பல படிகளைக் கடக்க வேண்டும்

யாழ் மத்தி வீரர் எடின்

கே: முரளி நல்லிணக்க கிரிக்கட் போட்டிகளில் கலந்து கொண்ட அனுபவம் பற்றி?
ப: யாழ் மாவட்ட தெரிவு அணிக்கு தலைமை தாங்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது மகிழ்ச்சியே! இவ்வணியில் பாடசாலையை விட்டு வெளியேறிய 20 வயதுக்குட்பட்ட வீரர்களும், பாடசாலை 19 வயதுக்குட்பட்ட அணி வீரர்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இறுதிப்போட்டி வரை முன்னேறிய நாங்கள் கிண்ணம் வெல்லாதது ஏமாற்றமே.



கே: சிங்கப்பூர் சென்ற இலங்கைத் தெரிவு அணியில் இடம்பெற்ற அனுபவம்?
ப: வட மாகாணத்தில் இருந்து ஐவரும், கிழக்கு மாகாணத்திலிருந்து இருவரும் கலந்து கொண்டோம். ஏனைய சகோதர மொழி வீரர்கள் எங்களுக்கு உறுதுணையாகவும், சினேகபூர்வமாகவும் இருந்தார்கள். சிங்கப்பூரின் இரண்டு அணிகளுடன் விளையாடும் வாய்ப்புக் கிடைத்தது. இரண்டிலும் நாங்களே வெற்றி பெற்றோம். ஒரு போட்டியில் நான் அரைச்சதம் பெற்றேன்.

கே: 'புற்றரை' ஆடுகளங்களில் விளையாடும் போது எதிர்நோக்கும் சிரமங்கள் ஏதாவது உண்டா?
ப: நானும், சகபாடி சென்.பக்றிக்ஸ் வீரர் ரியூடரும் இடையிடையே தேசிய மட்டத்திலான போட்டிகளில் கலந்துகொள்வதால் எங்களுக்கு புற்றரை ஆடுகளங்கள் பழக்கப்பட்டு விட்டன. ஏனைய வட, கிழக்கு வீரர்களுக்கு புற்றரை ஆடுகளங்களில் விளையாடுவது கொஞ்சம் கடினமே!

கே: உங்களுக்கு (வடபகுதி வீரர்களுக்கு) மேலும் தேவைப்படும் பயிற்றுவிப்பு வசதிகள் எவை?
ப: புற்றரை ஆடுகளங்கள் இங்கு அமைக்கப்பட வேண்டும். அவற்றுடன், 'உள்ளக வலைப்பயிற்சி கூடங்களும் அமைக்கப்படவேண்டும். தற்பொழுது மழை காலமாதலால் மைதானங்களில் பயிற்சியில் ஈடுபட முடியாது.



கே: உலக சாதனை வீரர் முரளியுடன் பழகிய அனுபவம்?
ப: நல்ல மனிதர். தனிப்பட்ட ரீதியில் பழகும் சந்தர்ப்பம் அதிகளவில் கிடைக்காவிட்டாலும், போட்டிகளின் போது சந்தித்துக் கொண்டோம். முரளி நல்லிணக்க போட்டிகளிலும் இறுதியாட்டத்தில் மட்டுமே கலந்து கொண்டார். தற்பொழுதும் தேவைகளின் நிமித்தம் மின்னஞ்சலில் தொடர்பு கொள்வதுண்டு.

கே: சிங்கப்பூர் சென்ற அணியின் பயிற்றுவிப்பாளர், இலங்கையணியின் முன்னணி வீரர் சங்கக்காரவுடன் பழகிய அனுபவம்?
ப: பயிற்றுவிப்பாளராக இலங்கையணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ரவீந்திர புஸ்பகுமார கடமையாற்றினார். விசேட தூதுவராக சங்கக்காரா கலந்து கொண்டார். அவர், எங்களைத் தேடி வந்து கதைப்பார். ஆட்ட நுணுக்கங்களை நிறையவே சொல்லித் தந்திருக்கின்றார்.

கே: இம்முறை எஸ்.எல்.பி.எல் இல் ஆடும் வாய்ப்பு ஏன் வடபகுதி வீரர்களுக்கு கிட்டவில்லை?
ப: தெரியவில்லை. ஆனால் எங்களை நாங்கள் நிரூபித்திருக்கின்றோம். சிங்கப்பூர் சென்ற இலங்கை தெரிவு அணிக்காக பெறப்பட்ட இரண்டு அரைச்சதங்களையும் நாங்களே பெற்றிருந்தோம். இதனால் எங்கள் திறமைகளையும் அவர்கள் கண்டு கொண்டார்கள். அடுத்த எஸ்.எல்.பி.எல் இல் விளையாட சந்தர்ப்பம் கிட்டலாம்.

கே: தேசிய அணியில் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டா? ப: அதற்கு பல படிகளைக் கடக்க வேண்டும். சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அதற்கான காலமும், நேரமும் சரியாக அமைய வேண்டும். ●

- க.யசோதரன்

# கபடியில் தங்கம் வென்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலம் தேசிய மட்டத்தில் சாதனை

“எமது பாரம்பரிய விளையாட்டுக்கள் அருகிவருகின்றன. அவற்றில் மாணவர்கள் காட்டும் ஆர்வம் குறைந்து வருகின்றது. அதற்கான ஊக்குவிப்புக்கள் எதுவும் இல்லை. சிறந்த பயிற்றுவிப்பாளர்கள் இல்லை” போன்ற பல குற்றச்சாட்டுக்கள் எம் சமூகங்களின் மீது சுமத்தப்படுகின்றன. அழிந்துவரும் எமக்கே உரித்தான விளையாட்டுக்களுக்கு புத்துயிர் அளிக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமை. இவற்றில் பாடசாலைகளுக்கு முக்கிய பங்குண்டு.

அந்தவகையில், நெல்லியடி ம.ம.வித்தியாலயம் சாதித்து காட்டியிருக்கின்றது என்று தான் சொல்ல வேண்டும். கடந்த செப்டெம்பர் 17ஆம் திகதி தேசிய மட்டத்தில் இடம்பெற்ற கபடி இறுதிப்போட்டியில் தங்கப்பதக்கத்தினை சுவீகரித்து பாடசாலைக்கும், யாழ் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்திருக்கின்றது.

வெற்றி தொடர்பாக தங்கம் வெற்ற கபடி அணியின் பயிற்றுவிப்பாளர் திரு.தவச்செல்வனுடன் 'கேடயம்' தொடர்பு கொண்டு கேட்ட போது, “வடமாராட்சி பிரதேசத்தில் புகழ்பூத்த பாடசாலையாக கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாட்டிலும் தலைநிமிர்ந்து நிற்கும் எங்கள் பாடசாலை தனது வரலாற்றை ஆவணப்படுத்தும் வகையில் தேசியமட்டத்தில் சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளது. இதனால் பாடசாலை சமூகத்தினர் அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி.

எமது பாடசாலையில் முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்ட கபடிப்போட்டியில், வடமாகாணத்தில் 15 வயது ஆண், பெண் இரு அணிகளும் வெற்றி பெற்று தேசியமட்ட போட்டியிலே பங்குபற்றியிருந்தன.

இதில் பெண்கள் அணியானது வலய, மாவட்ட, மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்டதுடன் தேசிய மட்டத்திலும் முதலாம் இடத்தினை பெற்று தங்க பதக்கத்தினை சுவீகரித்து சாதனை படைத்தது.

வடக்கு மாகாணத்திலே இதுவரை கபடிப்போட்டியில் கண்டிராத சாதனையை எமது பாடசாலை மாணவர்கள் எட்டியதென்பது இலகுவானதொரு வெற்றியல்ல. பல சவால்களுக்கும், இடர்பாடுகளுக்கும் இடையே எமது பாடசாலை அதிபரின் ஒத்துழைப்புடன் மாணவரது அயராத உழைப்பும், ஒழுங்கான பயிற்சியும் இவ்வெற்றிக்கு பெரும் உறுதுணையாக இருந்தது.

வடமராட்சி பிரதேசத்தில் 30 வருடங்களின் பின் இவ்வாறானதொரு வெற்றி நிலைநாட்டப்பட்டிருப்பது என்பது எமது பிரதேசத்தின் பெருமையை எமது பாடசாலை நிலை நிமிர்த்தி காட்டியுள்ளதை காணமுடிகிறது. எமது பாடசாலையில் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட பயிற்சியும், சிநேகபூர்வ போட்டிகளும், பயிற்சிப் போட்டிகளும் வீரர்களின் ஆற்றல்களை வலுப்படுத்தியிருந்தது. தேசியமட்டபோட்டியில் பங்கு பற்றிய எமது மாணவரது உடலாரோக்கியத்துடன் உளநிலையும் மிகவும் வலுவாகவே இருந்தது. அத்துடன் பெற்றோர்களது முழுமையான ஒத்துழைப்பு மாணவர்களை மேலும் உற்சாகப்படுத்தியிருந்தது.

எமது பாடசாலையின் வெற்றிப்பாதையில் தேசிய சாதனையாளர்களாக செல்விகள் இ.பிரியவர்ணா (அணித் தலைவி), இ.அமீரா(உப தலைவி), உ.லங்கீர்த்தனா, ஜெ.நிதுசா, நா.அபிசாந்தினி, க.நிரஞ்சலா, த.தருணிகா, த.அபிலாசினி, ச.சங்கவி, இ.கோபிகா, வி.ஞானகி ஆகியோர் அணியில் இடம்பெற்றிருந்தனர். இவர்களுள் பிரியவர்ணா, சங்கவி ஆகிய இருவரும் தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டமை எமது பாடசாலைக்கு மேலும் பெருமை சேர்க்கிறது. ●

> **“வடக்கு மாகாணத்திலே இதுவரை கபடிப்போட்டியில் கண்டிராத சாதனையை எமது பாடசாலை மாணவர்கள் எட்டியதென்பது இலகுவான தொருவெற்றியல்ல.”**












# லக்ஷ்மி ஸ்ரோர்ஸ்

## இணுவில்

மலிபன், மாம், மஞ்சி, டயானா,
எ(க்)ட்ரா, பிறிமா, சூர்யா
தயாரிப்புக்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

கே.கே.எஸ். வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்
தொ.பே : 0770680029




## நீங்களும் செய்தியாளராகலாம்..

உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு நிகழ்வுகளை
படங்களுடன் கேடயத்துக்கு அனுப்புங்கள்.
பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி
நிலைய மாணவர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
ஆர்வமுள்ளவர்கள் எழுதி அனுப்புங்கள்.


The World Navigators (Pvt) Ltd
Customer Satisfaction Is The Key For Our Business
Our Services..
Air Ticket Booking
Holiday Packages
Wedding and Honeymoon Packages
Immigration Consultancy
SriLanka
WE DO MANY OTHER SERVICES FOR YOUR COMFORTABLE LIVING
CALL US ANYTIME, ANYWHERE, ANY DAY FOR..
0094 11 7905089
Join with us to make your life easier
0094 11 205 5499
33A, W.A.Silva Mw,
Colombo - 06
Tel : 0094 117905089, Hotline : 0094 772598250, E-mail : theworldnavigators@gmail.com


jsp
All Printing Solutions Under One Roof
JEYASRI
Printers
50,College Road,
Neeraviyadi,
Jaffna.
T:+94 (0) 21221 9129
M:+94 (0) 77583 4835
+94 (0) 77654 1501
E: jeyasriprinters82@gmail.com


Van for hire
Contact :


அபி கொம்பியூட்டர்ஸ்
வீடியோ அன் போட்டோ
டிஜிட்டல் வீடியோ எடிட்டிங், Blu-ray...
# 252, 254, Navalar Road,
Iluppaiyady Junction,
JAFFNA.
Tel: 0776305290, 0777271220, 0212220402

# கிருபா லேணர்ஸ்
## KIRUBA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சி பாடசாலை

மூன்று மொழிகளிலும் வாகன பயிற்சி அளிக்கப்படும்

பெண்களுக்கு நவீன காரில் பயிற்சிகள் வழங்கப்படும்

- குறிப்பட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- வான், முச்சக்கரவண்டி, உழவு இயந்திரம்(டெக்டர்) அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தியானால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற முடியும்.



- கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.




- தவணை முறைக்கட்டணம்.
- எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை.

தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
0212224353, 0214923200

கிளைகள் :

| சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | விசுவமடு |
|---|---|---|---|---|
| 0212242022 | 0214923202 | 0213006550 | 0212285505 | 0213201515 |
| 0714546956 | 0213201818 | 0714546957 | 0714546955 | 0714546955 |

நவீன நாகரீக உலகின் முன்னோடி



Lovers Corner

கொரியா, ஹொங்கொங், சீனா ஆகிய நாடுகளில் இருந்து
நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பான்சி பொருட்கள்
அன்பளிப்பு பொருட்கள், காலணிகள்,
காப்புக்கள், தோடுகள், ...
ஒப்பனைப் பொருட்கள் மற்றும்
மங்கையர் மனம் கவர்
பல பொருட்களுடன்: யாழ் நகரில்
புதுப்பொலிவுடன்
உதயமாகியுள்ளது.





No.164, Ramanathan Road, Jaffna.
No. 50, Pointpetro road, Nallur.
Tel :077 8357928, 075 0347738, 021 222 ...49


அச்சிட்டோர் : ஜெயபூர் பிறிண்டேர்ஸ், இல. 50, நீராவியடி, யாழ்ப்பாணம்.